தென்மொழி

தமிழீழ மறவரைத் தமிழால் வணங்குவேன்!

மாந்த உரிமைகள் மறுக்கப் படுவதைக்
காந்தும் உளத்தொடு கருத்தினும் செயலினும்
இந்நில வுருண்டைமேல் எவரெழுந் தெதிர்த்துச்
செந்நிறக் குருதியைச் சிந்துகின் றாரோ —

விண்ணசை வுறஎவர் வெற்றி விடுதலைப்
பண்ணிசை முழக்கிப் பாடுகின் றாரோ —

அவரை வாழ்த்தும்இவ் வார்வ நெஞ்சம்,

தவறிலா விடுதலைப் புலிகளைத் — தமிழீழ

உரிமை வேள்விக்கு உயிர்தரும் இளைஞரை —

வரிநிறம் மாறு வேங்கை வயவரை —

குறிதிசை திறம்பாக் கொள்கை மறவரை —

உரம்நெகி ழாத உரிமை உளங்களை —

விலையில் லாதஅவ் வீர உயிர்களைத்
தலைதரை தாழ்த்துத் தமிழால் வணங்குமே!

சுவடி : 18
ஓலை : 10

விலை
உருபா 1-25

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

www.thamizham.net - Free E book No 7521

நமக்கு வந்த மடல்கள்.

0: 920: பேரறிவு சான்ற பெருமைக்கும், பெருமதிப்பிற்கும் உரிய ஐயா பாவலரேறு அவர்கட்கு வணக்கம். உலகத் தமிழின முன்னேற்றக் கழகப் பொறுப்பாளர்களை மாவட்டம் தோறும் அமர்த்துதல் தொடர்பாகத் தாங்களும், அமைப்புச் செயலாளரும் சுற்றுச் செலவு மேற்கொண்டு உ. த. மு. க. அமைப்புகளைக் கட்டுக் கோப்பாக, அமைத்து வருவது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். மேலும் அது தொடர்பாகக் கூட்டப்பெறும் அன்பர்கள் கூட்டத்தில் தாங்கள் பொதுத் தொண்டுபற்றியும், இனக்காப்பு பற்றியும் எடுத்துரைக்கும் கருத்துகள் மிகமிக அரிய கருத்துரைகளாகும். 'குடிசெயல்வகை' என்னும் குறள் அதிகாரத்தை வைத்துக்கொண்டே நீள்வினை பற்றியும் உ. த. மு. க. அமைப்பின் இன்றியமையாமை பற்றியும் சேலத்தில் நடைபெற்ற அமைப்புக் கூட்டத்தில் ஆற்றிய உரை வந்திருந்தோரைச் சிந்திக்கவும் அதன்வழிச் செயலாற்றவும் வழிப்படுத்துமாறு அமைந்த உணர்வு உரை ஆகும். இதுபோன்ற திருக்குறள் வழிக் கருத்துரைகள் இளைஞர்களிடைச் சென்று சேர வேண்டும். இக்கால் தமிழகமெங்கும் வாழும் இளைஞர்களின் உணர்வு இழந்தும் அறிவு அழிந்தும் வருகின்ற நிலையே இருக்கின்றது. தங்களின் நல்லாற்றுப்படுத்தும் அறிவுரைகள் இளைஞர்களிடைச் சென்று சேருமானால் அது தமிழின முன்னேற்றத்திற்கு வழிகோலும். ஆகவின் ஒவ்வொரு தென்மொழி அன்பரும் 'தென்மொழி' இதழை இளைஞர்கள் படிக்குமாறு தூண்டவேண்டும். அதன்வழி தென்மொழி படிக்குநர் தொகை பெருக வேண்டும்! அப்போதுதான் அரிய அறிவுரைகள், உண்மை நிலைகள் மக்களுக்கு விளங்கும். மக்களுக்கு நிலைமைகளை உணர்த்தாமல்—அவர்கள் அறியுமாறு சொல்லாமல், எழுச்சி கொள்ளச் செய்யவியலாது. மேலும் தாங்கள் எழுதவிருக்கும், 'திருக்குறள் மெய்ப்பொருளுரை,' தமிழினத்திற்கு மட்டுமின்றி உலக மாந்த இனத்திற்கே அறிவுகொளுத்தும் வண்ணம் வெளிவர விரும்புகிறேன். இந்நூல் வெளிவர வேண்டுவது காலத்தின் கட்டாயம். உண்மையான மாந்த நேயத்தோடு தாங்கள் கூறும் மெய்யறிவுக் கருத்துகளை எல்லா மக்களும் ஏற்றுக்கொள்ளும் காலம் வெகுதொலைவில் இல்லை. தமிழின விடிவிற்காகத் தளராது உழைக்கும் உங்களோடு தொண்டாற்ற அணியமாக இருக்கிறேன்.—செ. கண்ணன், கோவை.

0: 921: உங்கள் தமிழ் நெஞ்சத்துக்குக் கோடானுகோடி வணக்கம். நம் தமிழர் தங்கள் எளிய தேவைகளை நிறைவு செய்துகொள்ளத்தான் அலைகின்றனர். நாட்டின் பெருநோக்கில், இனத்தின் மேலாம் வளர்ச்சியில் நாட்டமில்லை. திறமை இருக்கிறது-என்னபயன்? தனித் தனித் திறமை யாருக்கு வேண்டும்? கூடிக் களைவதுடன் சரி. கூடிச் செயல்படுவது எப்போது? வலிவற்ற தமிழ்க் குமுகாயத்தை வைத்துக்கொண்டு வக்கணை பேசுவதில் பயன் என்ன? தமிழனுக்கு வலிவுசேர்க்க என்னவழி-அதைப்பார்க்க வேண்டும். நம்மின மக்கள் சந்து பொந்து வீடுகளிலும் குப்ப(குப்பையக)த்துச் சேரிகளிலும்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

www.thamizham.net - Free E book No 7521



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ்மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: **பெருஞ்சித்திரனார்**
புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன, (சிங்கை).
தென்மொழி மறை. நித்தலின பனார், தென்மொழி ந. முத்துக் குமரனார்
தென்மொழி ப. துரையரசன், தென்மொழி. நா. இளமாறன்.
அமைச்சர்: அழ. இளமுருகன், அறி. இ.
(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன)

சுவடி 18] தி. பி. ௨௦௧௩ விடை ('மே-சூன்'82) [ஓலை : 10

விடுதலைப் புலிகளும் விரும்பத் தகா நடவடிக்கைகளும்!

தமிழீழ நாட்டுரிமைக்காகப் போராடும் தீவிரக் கொள்கையுடைய விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஐவர், அண்மையில், சென்னையில் தமக்குள், கொண்ட கொள்கைப் பூசல்களின் காரணமாக, ஒருவரையொருவர் கைத்துமுக்கியால், சுட்டுக் கொண்டதும், அதனால் தமிழகக் காவலர்களால் பிடிபட்டுக் காவல் சிறையில் வைக்கப் பெற்றிருப்பதும் நமக்குத் தெரியும். நாட்டின் விடுதலை எனும் உயர்ந்த குறிகோளுக்காகத் தங்களின் உடல், உயிர்,

www.thamizham.net - Free E book No 7521

வாழ்க்கை ஆகிய அனைத்தையும் பொருட்படுத்தாமல், உற்றார் உறவினர்களைப் பிரிந்து, போராட்ட வாழ்க்கையை மேற்கொண்டு உலக வாழ்வியல் நலன்கள் அனைத்தையும் துறந்து, முனைப்புள்ள ஓரியக்கமாக இருந்துவரும் விடுதலை வீரர்கள், அவர்களின் கொள்கை இலக்கை அடைகின்ற பாதையில், தமக்குள் தாமே பூசல் கொண்டு, இகலுற்றுப், பகையுணர்வுடன் போராடிக் கொள்வார்களானால், அந்நிலை எந்தக் காரணத்தின் பொருட்டாக எழுந்தது என்றாலும், அது விரும்பத்தகாததும், வெறுக்கத்தக்கதும், இகழ்ச்சிக்குரியதும், எதிரிகளை மேன்மேலும் வலுப்படுத்துவதும் ஆகும். விரும்பியோ விரும்பாமலோ, தமக்குள் தாமே எழுப்பிக்கொள்ளும் சிறுசிறு சிக்கல்களையும், கருத்து வேறுபாடுகளையுமே போக்கிக் கொள்ள இயலாத இவர்கள், நாட்டு மக்களின் இன, அரசியல் சிக்கல்களைத் தீர்த்து விடுவர் என்று நம்புவதும் எதிர்பார்ப்பதும் ஏமாற்றத்திற்குரியதாகும்.

இனி, இவர்கள் பிடிபட்ட நிலையிலும், அதற்குப் பின் நடந்த செயல்முறைகளிலும், தமிழக அரசும் காவல் துறையினரும் நடந்து கொண்ட, கொள்கிற நடவடிக்கைகளும் நமக்கு உவப்பானவையாகவும், நயன்மை(நியாயம்) உடையவாகவும் இல்லை. காவல் துறையைப் பொறுத்த மட்டில், அவர்கள் செய்தனவாகக் கருதப்பெறும் குற்றங்கள் சில இருக்கலாம். நுழைவிசைவு (Visa) இல்லாமல் இந்த நாட்டிற்குள் நுழைந்ததும் தங்கியிருந்ததும், உரிமம் இல்லாமல் துமுக்கி அல்லது வேட்டெஃகம் வைத்திருந்ததும், அவற்றைக் கொண்டு இவர்கள் தமக்குள் சுட்டுக்கொண்டதும் போன்ற குற்றங்களே, இந்த நாட்டிற்குள் அவர்கள் செய்தவாகக் கருதப்படும் குற்றங்கள். இவை கடுமையான குற்றங்கள் ஆகா. ஏற்கனவே இத்தகைய குற்றங்கள் இங்கு ஏராளமாக நடந்து கொண்டுதாம் இருக்கின்றன. அவற்றுக்காக நாள்தோறும் நூற்றுக்கணக்கான பேர் பிடிக்கப்பட்டும், தண்டிக்கப்பட்டுந்தாம் வருகின்றனர். மேலும், ஒரு நாட்டில் இயல்பாக நடைபெற்றுவரும் குற்றங்களே இவை. எனவே, இக் குற்றங்களுக்காகப் பிடிபட்டிருக்கும் ஈழத்தமிழ் இளைஞர்கள், இங்குள்ள அரசு- நடைமுறைச் சட்டங்களின்படி குற்றவாளிகளாகக் கருதித் தண்டனையளிக்கப்படுவதை எவரும் குறைகூற வாய்ப்பில்லை. அஃது, ஒரு நாட்டரசின் இயல்பான சட்ட நடவடிக்கையே.

ஆனால், பிடிபட்டுள்ள விடுதலைப் போராட்ட வீரர்கள் தொடர்பாக, இங்குள்ள அரசும், காவல்துறையினரும் நடந்து கொள்ளும் நடைமுறைதான் விரும்பத்தக்கதாகவும் போற்றத்தக்கதாகவும் இல்லை. முதலில் அவர்கள் நம்முடைய நாட்டில் வன்முறைகளை விளைவிக்க வந்தவர்களோ, விளைவித்தவர்களோ அல்லர் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அவர்கள் நம்நாட்டைப் பொறுத்த அளவில் சில இயல்பான(கடுமையான என்று சொல்ல முடியாது)குற்றங்களைச் செய்தவர்களே! இன்னுஞ் சொன்னால் அவர்களுடைய நாடா

www.thamizham.net - Free E book No 7521

கிய இலங்கையில் கூட, அவர்கள் மதிக்கத் தகுந்த அரசியல் குற்றவாளிகளே! இன்னும்கூட, திறந்த மனத்துடனும் மாந்த உரிமை நேய உணர்வுடனும் சொல்வதானால், அவர்கள், வெறும் தந்நல அரசியல்காரர்களைவிடப் பலநூறு மடங்கு சிறந்தவர்கள். புதிய மறுமலர்ச்சி வரலாற்றை விளக்கப் புகுந்த வீர மறவர்கள்! எதிர்காலத்தில் உரிமை கிடைத்த தமிழீழ வரலாற்றில், அவர்களின் பெயர்களும உருவங்களும் பொன்வண்ணத்தாலும், பொன்சட்டமிட்டும் போற்றப் பெறும் தகுதி வாய்ந்தவை. இத்தகைய விடுதலை வீர மறவர்கள் விளைவிக்கும் வீரச் செயல்களே இலக்கியங்களாகவும், வரலாறுகளாகவும், வீரப்பாவியங்களாகவும் உருப்பெறுகின்றன. எனவே உலகியலில் பொதுவாகக் குற்றவாளிகள் என்று கருதப்படுகின்றவர்களுக்கும் இவர்களுக்கும் மிகப்பெரிய வேறுபாடுகளுண்டு.

அவர்கள் நாட்டைப் பொறுத்தவரை அவர்கள் புலிகளாகலாம்-அரிமாக்களாகலாம். அல்லது அந்நாட்டு அரசின் உணர்வுப்படி அல்லது கொள்கைப்படி, கொஞ்சம் மதிப்புக்குறைந்த சொற்களால் சொல்வதானால், தீவிரக்கொள்கையாளர்கள் என்றோ, வன்முறையாளர்கள் என்றோ, இன்னும் சிறிது தாழ்த்திச் சொல்வதானால் கொள்ளைக்காரர்கள் என்றோ, கொலையாளிகள் என்றோ அவ்வரசு வண்ணிக்கலாம். ஆனால் நம் நாட்டைப் பொறுத்தவரை அவர்கள் வெறும் குற்றவாளிகளே! இப்படிப்பட்ட வெறும் குற்றவாளிகளைப் பிடித்த பின்னர் இந்த அரசும் காவல்துறையும் நடந்துகொண்ட-கொள்கின்ற நடைமுறைகள் சரிதாமா என்பது நடுநிலையுடன் நாம் எண்ணிப் பார்க்க வேண்டிய ஒன்று.

ஒரு நாட்டின் ஆட்சி முறைப்படி, அந்நாட்டின் பகுதி மக்களுக்காக விடுதலை உரிமைக்குப் போராடுவோர்கள், அந்நாட்டில் குற்றவாளிகளாகத்தாம் கருதப்படுவர். ஆனால் **அந்த வகையில்** அவர்கள் வேறொரு நாட்டில் **குற்றவாளிகள் அல்லர்.** வேண்டுமானால் இரு நாடுகளின் அரசியல் உறவின் அடிப்படையில், அவர்களுக்கு ஆதரவோ அடைக்கலமோ தராமல் இருக்கலாம். ஆனால் அவர்களை மற்ற நாட்டின் அரசியல் நடவடிக்கைகளுக்கான குற்றவாளிகளாகக் கருதக் கூடாது. எனவே, நம் தமிழக, அல்லது நடுவணரசின் காவல்துறையும் ஒற்றுத்துறையும் பிடிபட்டுள்ள தமிழீழப் புலிகளை சிங்கள அரசின் குற்றச்சாட்டுகளுடன் தொடர்பு படுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வது, மிகவும் கொடுமையானதாகும். இன்னுஞ் சொன்னால் கண்டிக்கத் தக்கதுமாகும்.

முதற்கண், நம் காவல் துறையினர், அப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களைக் கள்ளத் தோணிகளாகவும், கொள்ளைக்காரர்களாகவும் அவர்களின் அறிக்கைகளின்படி ஏதோ ஒரு பெண்ணுக்காக அடித்துக் கொண்டவர்களாகவும் செய்தி வெளிப்படுத்தியிருப்பது, அவர்களின் தூய்மையான நாட்டினப் போராட்டக் கொள்கைகளை இழிவு

www.thamizham.net - Free E book No 7521

படுத்துவதாகும். எந்த ஒரு நாட்டின் விடுதலைப்போராட்ட இயக்கத்திலும் இந்நடை முறைகள் இயல்பானவையே! விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு நாடுவிட்டு இன்னொரு நாட்டுக்குப் போவதும், அவர்களின் இயக்கத் தேவைக்காகப் பல்வேறு வகைகளில் பணம், திரட்டுவதும் தவறோ குற்றமோ அல்ல. அரசு அதிகாரத்துடன் செய்கின்ற இவ்வேலைகளைப் புதியஓர் அரசை அமைக்க விரும்புபவர்கள் அதிகாரமில்லாமல் செய்கிறார்கள். இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களும் இத்தகைய வினைகளில்தாம் அக்காலத்தில் ஈடுபட வேண்டியிருந்தது. அவர்கள் செய்த கொடுமைகளையும், தவறான வினைகளையும் பட்டியலிட்டுப் பார்த்தால், இவர்கள் செய்தனவாகக் கருதப்படும் செயல்களும், திரட்டப்பெற்றதாகக் கூறப்பெறும் தொகைகளும் முறைகளும் மிகையானவையும் அவ்வளவு கொடுமையானவையும் அல்ல என்பதை நாம் நடுநிலைக் கண்ணோட்டத்துடன் சிந்தித்து முடிவு செய்ய வேண்டும்.

ஒரு நாட்டு விடுதலைப் போராட்டக்காரர்கள் செய்த அல்லது கடைப்பிடிக்கிற பொதுவான நடைமுறைகளைத்தாம் இவர்களும் பின்பற்றியிருக்கிறார்கள், அதுவும் இந்நாட்டிலன்று; அவர்களுடைய நாட்டில். போர்க்காலத்தில் ஓரரசு கடைப்பிடிக்கிற நடைமுறைகளும் போராட்டக் காலத்தில் ஓர் அரசை அமைக்கவிருக்கின்ற ஓர் இயக்கம் கடைப்பிடிக்கிற நடைமுறைகளும், ஏறத்தாழ ஒன்றாகவேதாம் இருக்கும். ஆனால், அவற்றின் மதிப்பீடுகள் தாம் வெவ்வேறாக இருக்கும். காலத்தாலும், இடத்தாலும், வினையாலும், அந்நடைமுறைகளும் மதிப்பீடுகளும் தவிர்க்க முடியாதவையே! ஆனால், அதற்காக ஒரு விடுதலை இயக்கத்தின் பின்புலன்களையும், உள்முகச் செயற்பாடுகளையும், அவற்றுக்குத் தொடர்பில்லாத ஒரு வேற்று நாட்டு அரசு ஆராய்வதும் ஆராய்ந்த செய்திகளை வெளிப்படுத்துவதும் நல்லதன்று; மாந்தநேய உரிமைகளை மதிக்கின்றசெயலுமன்று. எனவே, அவர்கள், இங்குச்செய்தவாகக்கருதப்பெறும் குற்றங்களுக்கு வேறான, அல்லது இந்தநாட்டு அரசுக்கு எந்தவகையிலும் தொடர்பில்லாத பின்னணிகளை இங்குள்ள காவல்துறையினர் ஆராய்வது தடுக்கப் பெற வேண்டும். நெடுங்காலமாக உரிமைக்குப் போராடி, இறுதியில் விடுதலை பெற்றுக் குடியரசு நாடாக விளங்கும் இந்திய அரசு அல்லது அதன் கீழ் உள்ள தமிழக அரசு, மற்றொரு விடுதலை முயற்சியின் அரசியல் பின்னணிகளை விளங்கிக் கொள்ளவும் மதிப்பிடவும், அம் முயற்சிகளின் தேவைகளை உணராமல் இருப்பதும் வியப்பைத் தருகிறது. கடந்த காலத்தில், வங்காள தேசத்தின் விடுதலை இயக்கமாகிய முக்திவாகினி என்னும் படைக்குத் துணைபோனதும், இந்நாட்டுப் படைகளை அனுப்பி அந்நாட்டு விடுதலைக்குப் போரிடச் செய்ததும், பாலத்தீன விடுதலை இயக்கத்திற்கு ஆதரவு தரும்வகையில் அதன் தலைவரை வரவேற்பதும் பாராட்டுவதும் மறைமுகமாக அதன் நடவடிக்கைகளுக்குத் துணை நிற்பதுமே ஆகும். அந்த வகையில் இலங்கையில் உள்ள தமிழீழப்

www.thamizham.net - Free E book No 7521

போராட்டமும் ஓர் இனத்தின் உரிமை மீட்பு விடுதலை முயற்சியே. எனவே, இந்நிலையில் அப்போராட்ட வீரர்களுக்கு இந்திய அரசு ஆதரவு தராமல் இருப்பது, தமிழினம் என்றென்றுமே எவ்விடத்தும் அடிமையுற்றே கிடக்க வேண்டும், விடுதலை பெற்று உய்யவே கூடாது என்னும் தன் எண்ணத்தை எதிரொலிப்பதாகவே கருத வேண்டி யுள்ளது. அதற்கு உடன்படும் வகையில்தாம் விடுதலைப் புலிகளின் பின்புல நடவடிக்கைகள் தீவிரமாக ஆராயப் பெறுகின்றன. அவர்களின் கொள்கைக்கும் உயிர்வாழ்க்கைத் தேவைக்கும் இரக்கம் காட்டியவர்களின் தன்மைகளெல்லாம் நடைமுறைகளெல்லாம் உசாவல், ஆய்வு என்னும் முறைகளில் தீர ஆராயப் பெற்று அச் சுறுத்தலுக்கு உள்ளாக்கப் படுகின்றன. அவர்களுடன் தொடர்புடைய வர்களாகக் கருதப்பெறும் பலரையும் காவல் துறை உசாவியது, இவர்கள் மேல் போடக்கூடியதாகக் கருதப்பெறும் எந்த வழக்குக்கு உதவக் கூடியதாக அரசு கருதுகிறதோ தெரியவில்லை, எனவே, தேவையற்ற இந்த வீணான நடைமுறைகளை உடனே தடுத்து நிறுத்திக் கொள்வதே அறிவுடைமை ஆகும்.

அடுத்து, பிடிபட்ட வீர மறவர்களை எக்காரணம் கொண்டும் சிங்கள அரசிடம் தமிழக அரசோ, அல்லது இந்திய அரசோ, ஒப்படைத்துவிடக் கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறோம். இதுபற்றித் தமிழகத் தலைவர்கள் அனைவரும் ஒரே குரலுடன் தங் களின் இணைவான கருத்தை வெளிப்படுத்தியிருப்பதை அரசு மதிக்க வேண்டும். அத்துடன், அவ்வாறு அவர்களை ஒப்படைப்பதற்கும் ஏற்ற சட்ட அடிப்படை இல்லை என்பதாகவும் அறிகிறோம்: (There was no provision in the Indian law to hand over illicit immigrants to srilanka authority —The Hindu 26-5-82) இந்நிலையில் அவர்களின் மேல் இருப்பதாகக் கூறும் குற்றங்களை மட்டும் வழக்குமன்றத்தின் வழியாக ஆய்ந்து, அவற்றுக்குரிய தண்டனைகளைத் தந்து, அத் தண்டனைக்காலம் முடிவடைந்ததும் அவர்கள் அனைவர்க்கும் அரசியல் அடைக்கலம் கொடுத்து அவர்களை இங்கேயே இருக்கும்படி செய்திட அரசு தீர்மானிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

இனி, இதே குரலில் இன்னொரு கருத்தையும் இலங்கையில் உள்ள தமிழீழ விடுதலைக் கூட்டணிக்குக் கூறிக் கொள்ள விரும்புகிறோம். தமிழீழ விடுதலைக் கூட்டணி, இவ்விடுதலைப் புலிகளின் கடந்தகால வன்முறைச் செயலுக்கும் தனக்கும் தொடர்பில்லாத தன்மையைப் பல்வகையான சூழல்களில், பல்வகையான நேரங்களில், குறிப்பாக அதன் உறுப்பினர்களின் பாராளுமன்றப் பேச்சுகளில், வெளிப் படையாகக் கூறியிருக்கின்றது. அக்கூற்று உண்மையாகவோ பொய்யாகவோ இருந்தாலும், இவ் விடுதலை வீரர்கள் பிடிபட்டவுடன், அது தன் பொதுவான கண்டனத்தை உடனடி அறிக்கை ஒன்றின் வழியாகத் தெரிவித்திருக்க வேண்டும். அதில், இவர்கள் இலங்கைக்கு அனுப்பப்படுவதைப்பற்றித் தங்களின் இயல்பான அச்சத்தை

www.thamizham.net - Free E book No 7521

இந்திய அரசுக்கு வெளிப்படுத்தியிருக்க வேண்டுவதுடன், அவர்கள் தொடர்பான நிலைகளில் இலங்கை அரசு, எவ்வாறு கண்ணியத்துடனும், மாந்தநேயத்துடனும் நயன்மை உணர்வுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்றும் விளக்கப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், இவற்றுக் கெல்லாம் மாறாகவும், எவரும் சற்றும் எதிர்பார்க்காத வகையிலும், இவர்கள் பிடிபட்டதற்கு அது, மகிழ்ச்சியடைவதாகப் பிறர் கருதும் வகையில் செய்தி வந்தது மிகவும் இழிவானதும் கண்டிக்கத் தக்கதும் ஆகும். (See, Indian Express, Madras Dt, 24 — 5 — '82) மண்.குதிரைத் தனமான அதன் இனமானமற்ற இந்நடவடிக்கை, எதிர்கால விடுதலை வரலாற்றில் ஈடுபட முனையும் வீரர்களுக்குப் பெருத்த அச்சமும் நம்பிக்கையின்மையும் ஊட்டுவதாகும். தெருவில் மற்ற வீட்டுக் குழந்தைகளால் அடிவாங்கி அழுது கொண்டுள்ள குழந்தையை மேலும் ஈவுஇரக்கமற்று அடிக்கும் அல்லது கண்டு சிரிக்கும் மாற்றாந்தாயின் கொடுமையான செயலைப் போன்றது அதன் தன்மை!

இனி, இறுதியாகத் தமிழகத்தை ஈடேற்ற எண்ணங்கொண்டு, தம் வாணாளை ஒப்படைக்க விரும்பும் தன்மானமும் வீரமும் ஈகவுள்ளமும் கொண்ட நல்ல முழுப் பிறவித் தமிழ் இளைஞர்குமுகாயத்திற்கு ஒரு சொல். 'புலி வேட்டைக்குப் புறப்பட்டவர்கள் கட்டுச்சோற்று மூட்டைக்காகச் சண்டையிட்டுக் கொண்டு மாண்டு மடிந்தது போல்' நம் இன முன்னேற்ற முயற்சி முடிந்து விடக் கூடாது. பொன்னுக்காகவும் பெண்ணுக்காகவும்போராடிச் செத்த அரச வரலாறுகள் பல உண்டு. அதே போல் மண்ணுக்காக மாய்ந்த அரசுகளும் பல, ஆனால் நாம் வெறும் மண்ணுக்காக மட்டும் போராடவில்லை. மண்ணே இல்லாத நிலையில் வாழ்வுரிமைக்கே நாம் போராட வேண்டியுள்ளது. இந்நிலையில் ஒற்றுமைதான் மிக முகாமையாக நமக்குத் தேவை. அதற்காக நாம் சிறிது காலத்திற்கு வேறு எந்தத் தேவையையும் இழந்து விடலாம் நமக்குக் கொள்கைகள் கூடத் தேவையில்லை, **ஒரே கொள்கை போதும்:** அது **தமிழினம், தான் இழந்த உரிமையை மீட்க ஒன்றுபடுவதே!** அதற்குத் தடையாக இருக்கும்படி, அது தன்னை வேறுபடுத்திக் கொண்டிருக்கும் அரசியல் பொருளியல், மதம், சாதி, கட்சி முதலிய அத்தனை நிலைகளினின்றும் தன்னை மீட்டுக் கொண்டாக வேண்டும். **அவற்றினின்று மீளாதவரை அது தன்னைத்தானாக அழித்துக் கொள்ளும்** என்பதில் **யாருக்கும் ஐயம் வேண்டா.** இந்த உண்மையையே அண்மைக்கால நிகழ்ச்சிகள் நமக்குத் தெள்ளத் தெளிவாக உணர்த்துகின்றன என்பதை இனியேனும் நாம் ஆழமாக எண்ணிப்பார்க்க வேண்டும்! இந்நிலையில் வீணாக நம்முள் பூசல்களை வளர்ப்பவர்களைத் துரசாக எண்ணப் பழகிக் கொள்ளுங்கள்! வாழ்க கொள்கை மறவர்கள்! ஒழிக அவர்தம் பூசல்கள்!

— பெருஞ்சித்திரனார்.

www.thamizham.net - Free E book No 7521

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

(தலைமையகம்)

பொறுப்பு அமர்த்த அறிக்கை—8

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் பொறுப்பாளர்களாகக் கீழ்க்காணும் அன்பர்கள். கொடுக்கப்பெற்றுள்ள பதவிப் பொறுப்புகளில் 1-6-82முதல் கழகச் சட்ட நெறிமுறைகட்குட்படும் பதவியாண்டுக் காலத்திற்குப் பதவிப் பொறுப்புகளில் அமர்த்தப் பெற்றுள்ளனர்.

தலைமையகம், சென்னை-5
1-6-82

பெருஞ்சித்திரனார்,
கழக முதல்வர்.

க, தலைமையகம் : **தலைமைக் கழகச் செயலாளர்கள்:**

4. பண்பியல் துறைச் செயலர் :
மருத்துவர் அ. விசுவநாதன் மரு,இ; அறு.இ; சின்னசேலம்

உ வடஆர்க்காடு மாவட்டம் - வடக்கு (வேலூர்)

1 **வாலாசா பேட்டை வட்டம்.**
பொருளர் : பீ. பாரி, சோளிங்கபுரம்.
(தலைவர், செயலர் முன்னரே அமர்த்தப் பெற்றுள்ளனர்)

2 **வாணியம்பாடி வட்டம்**
தலைவர் : மு. சு. அறிவன் (தங்கவேலன்)க. மு.,
வாணியம்பாடி
(செயலர் முன்னமே அமர்த்தப்பெற்றுள்ளார்.பொருளர் ஆய்வில்)

ங திருச்சி மாவட்டம்

1 **கரூர் வட்டம்.**
தலைவர்: புலவர் ப. எழில்வாணன், இலக், இ., பள்ளப்பட்டி,
(செயலர், பொருளர் ஆய்வில்)

ச தஞ்சை மாவட்டம்

1 **மயிலாடுதுறை வட்டம்**
பொருளர் : வெ. நடவரசன், மயிலாடுதுறை
(தலைவர் முன்னமே அமர்த்தப்பெற்றுள்ளார். செயலர் ஆய்வில்)

ரு தென்னார்க்காடு மாவட்டம்-தெற்கு(கல்லக்குறிச்சி)

1 **திட்டக்குடி வட்டம்**
தலைவர்: புலவர். துரை. காசிநாதன், பெண்ணாடம்.
(செயலர், பொருளர் ஆய்வில்)

www.thamizham.net - Free E book No 7521

2 உளுந்தூர்ப் பேட்டை வட்டம்.
பொருள்: புலவர் இளமுருகன் இலக், இ, நெமிலி
(தலைவர் செயலர் முன்னமே அமர்த்தப் பெற்றுள்ளனர்)

சு தென்னார்க்காடு மாவட்டம் - வடக்கு (விழுப்புரம்)

1 செஞ்சி வட்டம்
தலைவர்: புலவர். இரா. அழகனார் (சிங்காரம்) க. மு., ப, இ.
(செயலர், பொருளர் ஆய்வில்) செஞ்சி

எ கோவை மாவட்டம்

1 பொள்ளாச்சி வட்டம்.
பொருளர் : ப. வீரப்பன் க. மு., ஆ. ப, ஆனைமலை
(தலைவர், செயலர் முன்னமே அமர்த்தப் பெற்றுள்ளனர்)

அ சேலம் மாவட்டம்.
மாவட்டப் பொருளர். இல. அருட்செல்வன், சேலம்.
(செயலர் முன்னமே அமர்த்தப்பெற்றுள்ளார். தலைவர் ஆய்வில்)

1 சேலம் வட்டம்.
பொருளர் : பெ. மாது, மாரமங்கலத்துப்பட்டி,
(தலைவர், செயலர் முன்னமே அமர்த்தப் பெற்றுள்ளனர்.
(பிற அமர்த்தங்கள் ஆய்வில்)

அனைத்துத் தமிழர்க்கும் ஒரு வேண்டுகோள்!

தமிழகத்தில் தளைப்படுத்தப்பட்டுள்ள தமிழீழ விடுதலை வீரர்களுக்கு அரசியல் அடைக்கலம் தரும்படியும், அவர்கள் சிங்கள அரசிடம் ஒப்படைக்கப்படாமல் தமிழகத்திலேயே தங்கியிருக்கும்படியும், வேண்டுகோள் ஒன்றை ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதி அல்லது தட்டச்சு செய்து அவற்றை நான்கு படிகள் எடுத்து, அந்நான்கு படிகளிலும், ஆங்காங்குள்ள தமிழர்களிடம் ஆயிரக்கணக்கில் கையொப்பங்கள் வாங்கி, அவற்றுள் ஒன்றை இந்தியத் தலைமையமைச்சர்க்கும், மற்றொன்றை இந்திய அயலகத்துறை அமைச்சர்க்கும், மூன்றாவதைத் தமிழ் நாட்டு முதலமைச்சருக்கும், நான்காம் படியை. 'முதல்வர், உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் சென்னை-5, தமிழ்நாடு' என்னும் முகவரிக்கும் அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம். இவ்வரும் பணியை இன்றே தொடங்குங்கள்! முழு வெற்றி பெறும் வரை தொடருங்கள்!!

சென்னை-5 அன்பன்
5—6—82 பெருஞ்சித்திரனார்

தமிழ்ச்சிட்டு அன்பர்களுக்கு!

விடைத் திங்களுக்கான தமிழ்ச்சிட்டு அடுத்த மாத இதழுடன் இணைந்து வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.—அமைச்சர்

www.thamizham.net - Free E book No 7521

செய்திகள்

1. பாவேந்தர் பாரதிதாசன் விழா — திருக்கோவிலூர்

கடந்த 8-5-82 மாலை 7மணி அளவில், திருக்கோவிலூர், அங்காடித் தெருவில் அமைந்த திடலில், திருக்கோவிலூர் ஒன்றிய பகுத்தறிவாளர் கழகச் சார்பில், புரட்சிப் பாவலர் பாரதிதாசன் 90-ஆவது பிறந்த நாள் விழாவும், மண்டல்குழு அறிக்கையை வெளியிடக் கோரும் பொதுக்கூட்டமும் நடைபெற்றன. நிகழ்ச்சிக்கு மானமிகு ந. தமிழவேள். க. மு; கல். மு. தலைமையேற்றார். நகரப் பகுத்தறிவாளர் கழகத் துணைச் செயலர் திரு. ப. மதிவாணன் க. மு; திரு. இராம.ஆ நிரைக் காவலன் ஆகியோர் முன்னிலையேற்றனர். திருவாளர்கள் கடலூர். ப. க. தலைவர் **சு. அறிவரசு,** விழுப்புரம் **ந. தங்கராசு,** அ. கிருட்டிணமூர்த்தி வணி. இ; ச. இ., சி. கதிர்வேலு, மு. அழகப்பன் க. மு, தி. க. தணிகாசலம், கோவி. இளஞ்சேரன், புலவர் **இறைக்குருவனார்,** (உ. த. மு. க. முதன்மைக்குழு உறுப்பினர்) முதலியோர் கருத்துரைக்குப்பின், பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** சிறப்புரையாற்றினார். த. இராமசாமி அவர்கள் நன்றியுரை ஆற்றினார். பின்பு இரவு 11 மணியளவில் நிகழ்ச்சி இனிதே முடிவுற்றது.

௨. உ. த. மு. க. தென்னார்க்காடு (தெற்கு) மாவட்டம் தொடக்க விழா.

சென்ற மேழம் உசு (9-5-82) ஆம் நாள் ஞாயிறு மாலை 6 மணியளவில், தென்னார்க்காடு (தெற்கு) மாவட்ட உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் தொடக்க விழா, மாவட்டத் தலைவர் புலவர் திரு. **தூக்கிய திருவடியார்** அவர்களின் தலைமையிலும், திராவிடர் கழக மாநில அமைப்புச் செயலாளர் திரு. **கோ. சாமிதுரை** மு க; ச. இ. அவர்கள் முன்னிலையிலும் சிறப்புற நடைபெற்றது. நிகழ்ச்சித் தொடக்கத்தில் திரு. செ. வ. மகேந்திரன் தமிழ் வாழ்த்துப் பாடினார். திரு. க. நெடுவேற்சேரன் (தலைவர், உ. த. மு. க. கல்லை வட்டம்) தலைவரை முன்மொழிந்தார். புலவர் திரு. கு. அண்டிரன் (செயலர் உ. த. மு. க. கல்லை வட்டம்) வழிமொழிந்தார். சின்னசேலம் மருத்துவர் அ. விசுவநாதன் ம. இ; அ. இ. வரவேற்புரையாற்றினார் அதன் பின்னர்ப் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** உ. த. மு. க. கொடியினை ஏற்றி வைத்தார். தலைவர் முன்னுரைக்கும், திரு. **கோ. சாமிதுரை** அவர்களின் கருத்துரைக்கும் பின், அமையவிருக்கும் கழகத்தை வாழ்த்தி, திருவாளர்கள் ப. அரங்கநாதன், செ. வரதராசனார், பெ. ஆராவமுதன், மது. நாராயணசாமி, க. வேங்கடபதி க இ.ச;இ வை. ந. பழனியப்பன். வணி. இ, வெ. நாகரத்தினம், திரு. தமிழ்

www.thamizham.net - Free E book No 7521

வேந்தன்எழில், விழுப்பரையன், ச. சின்னத்துரை (மாவட்டப் பொருளர்), க. நெடுவேற்சேரன், புலவர் கு. அண்டிரன், ச. சண்முகம் க. மு. கு. செம்பியன் முதலியோர் உரையாற்றினர். அடுத்து, **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** மூன்றேகால் மணிநேரம் கழகக் கொள்கைகள் பற்றியும், அவற்றின் தேவைகள் பற்றியும் விரிவாகவும் விளக்கமாகவும் சிறப்புரையாற்றினார். இறுதியில் திரு. **செ. வ. புகழேந்தி** (மாவட்டச் செயலர்) நன்றிகூற நிகழ்ச்சி இனிதே முடிவுற்றது.

நிகழ்ச்சியின் இடையில் புலவர் செ. வரதராசனார், இல. இ. அவர்களின் திருக்குறள் தொடர் வகுப்பு—பொறையுடைமை அதிகாரம் நடைபெற்றது. திருக்கோவிலூர்ச் செல்வர், தொழிலதிபர் உயர்திரு ஏ. கே. தாசு(ப்பிள்ளை) அவர்கள் பாவலரேறு அவர்களுக்கு மின்னிழை (சரிகை) மாலையும், வேட்டி, துண்டையும் அணிவித்துப் பெருமை பாராட்டினார்.

3. பாவேந்தர் பாரதிதாசன் விழா: சென்னை.

சென்ற 15 - 5 - 82 காரி மாலை 6மணியளவில் சென்னை, தேவநேயப் பாவாணர் மாவட்ட நடுவண் நூலகத்தில், 'முச்சங்கம்'(தமிழ் இலக்கிய சங்கம்) சார்பில் பாவேந்தர் பாரதிதாசன் விழா நடைபெற்றது. விழாவிற்குப் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** தலைமை தாங்கினார். பாவரசர் திரு. பொன்னிவளவன், பாநிலவு திரு. த. **கோவேந்தன்** ஆகியோர் சிறப்புரையாற்றினர். தலைவர் தம் முடிவுரையில் பாவேந்தருடன் தாம் பழகியிருந்த நாட்களை நினைவு கூர்ந்ததுடன், அவரின் பண்புநலன்கள், பாடல் இயல்புகள் ஆகியவற்றைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். தொடக்கத்தில் திரு. கோ. இலட்சுமணசாமி (தலைவர் 'முச்சங்கம்') வரவேற்புரையும், இறுதியில் திரு. மு. முத்துவேலு நன்றியுரையும் ஆற்றினர்கள். இரவு 9½ மணியளவில் நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது.

4 நெய்வேலித் தமிழீழ ஏதிலியரைப் பார்வையிடல்:

நெய்வேலி அரசுப் பண்ணையில் வேலை இழந்து கடந்த மாதம் மறியலில் ஈடுபட்டு, அதனால் சிறை செய்யப் பெற்று, சென்னை நடுவண் சிறையில் உள்ள 330, இலங்கைத் தமிழீழ ஏதிலியரைக் கடந்த 20-5-82 வியாழன் பிற்பகல் 4 மணியளவில் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்**, **தாமரை பெருஞ்சித்திரனார்**, புலவர் **இறைக்குருவனார்**, **மணவைத்தம்பி** (இலங்கை குடிபெயர்ந்தோர் நலவுரிமைச் சங்கத் தலைவர்), பர். **ஆறிறைவன்**. அறி. மு. ஆகியோர் பார்த்துப் பேசி ஆறுதல் கூறினர். உலகத் தமிழின முன்னேற்றக் கழகச் சார்பில் அவர்களுக்குத் தின்பண்டங்களும் இலைச்சுருட்டுகளும் வழங்கப் பெற்றன. திரு **மணவைத்தம்பி** முன்னரே ஓரிரு முறைகள் அவர்களைப் பார்த்து இயன்ற நலன்களைச்செய்தது குறிப்பிடத்தக்கது.

www.thamizham.net - Free E book No 7521

6. உரத்தநாடு பாவேந்தர் தமிழியக்க மாநாடு.

கடந்த 29,30-5-82 ஆகிய இருநாள்களில் தஞ்சை மாவட்டம் உரத்தநாட்டில் பாவேந்தர் தமிழியக்க மா நா டு மிகச் சிறப்பாக, கொண்டாடப் பெற்றது. பட்டிமன்றம், பாட்டரங்கம், ஆய்வரங்கம், கருத்தரங்கம் ஆகியன செம்மையாக நடைபெற்றன. சட்டமன்ற அவைத்தலைவர் மாண்புமிகு. இராசாராம், மேலவைத் துணைத்தலைவர் மாண்புமிகு. புலமைப்பித்தன், திரு மன்னை நாராயணசாமி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். முதல்நாள் நடந்த பாட்டரங்க நிகழ்ச்சிக்கு மாண்புமிகு. புலமைப்பித்தன் தலைமையேற்றார். அரங்கில் திரு. ஈரோடு தமிழன்பன், திரு. புலவர் அடல் எழிலன், திரு. சங்கரலிங்கம் திரு. கங்கை மணிமாறன் திரு. இறையரசன், திரு. மூவரையன். திரு. தமிழேந்தி ஆகிய பாவலர்கள் பங்கேற்றனர். திரு. ப அருளி அவர்கள் "மக்கள் இன மின்ற தமிழ்நாடு" என்ற தலைப்பின் கீழ் பாவரங்கைச் சிறப்பித்தார். மறுநாள் நடந்த ஆய்வரங்க நிகழ்ச்சி "பெரியார் பேருரையாளர்" பேராசிரியர் திரு. இராமநாதன் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. திரு. சிலம்பொலி செல்லப்பன், திரு. அருளி, திரு. தமிழ்க்குடிமகன், திரு. பர். இளவரசு ஆகியோர் பங்கேற்றனர். திரு. ப. அருளி அவர்கள் 'பாவேந்தரும் பாரதியும்" என்னும் தலைப்பின் கீழ் ஆய்வுரை நிகழ்த்தினர். மாநாட்டில் இருபது தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன. அவற்றில் தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கைஅரசிடம் ஒப்படைக்கக் கூடாது என்று நடுவண், மாநில அரசுகளைக் கோரும் தீர்மானம் குறிப்பிடத் தகுந்ததாகும்.

அன்பர்களுக்கு ஓர் எச்சரிக்கை!

தென்மொழி அன்பர்களின் அழுத்தமான கொள்கைப் பற்றையும் தமிழ் ஈடுபாட்டையும், உண்மையான அன்புணர்வையும் தவறாகப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன், அன்பர்கள் ஒருவர், தங்களைத் தீவிரமான கொள்கைச் செயற்பாட்டுக்காரர்கள் என்று கூறிக் கொண்டு, திருப்பூர், வடவார்க்காடு, தென்னார்க்காடு, சென்னை முதலிய இடங்களில் உள்ள உறைத்த தென்மொழி அன்பர்களின் முகவரிகளைக் கேட்டறிந்து கொண்டு, அவர்களைத் தேடிப் பிடித்து அவர்களுடன் ஓரிரு நாட்கள் தங்குவதும், அவர்கள் நம்பும்படி பலரின் தொடர்புகள் தங்கட்கு உண்டென்று கூறிக் கொள்கைச் செயற்பாட்டுக் கென்றும், வேறுவேறு ஊர்களுக்குப் போகவென்றும் பலவகையில் பணம் தண்டி வருவதாகவும் கேள்விப் படுகிறோம். அவ்வாறு யாரும் தென்மொழிச் சார்பில் அனுப்பப் பெறவில்லை என்று அன்பர்கள் உணர்வதுடன், அன்பர்கள் அவர்களிடம் ஏமாறாதிருக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம். —அமைச்சர்.

---

www.thamizham.net - Free E book No 7521

சிறப்பு மடல்:

தமிழீழ விடுதலை வீரர்களை இலங்கை அரசிடம் ஒப்படைக்க வேண்டாம்!

ஐயா, கீழ்க்காணும் கடிதத்தை 'ஆசிரியர்க்கு மடல்கள்' பகுதியில் வெளியிட்டு நம் தமிழகத்தின் வேண்டுதலைத் தெரிவித்துக் கொள்ள வேண்டுகிறேன்.

ஈழத்தில் இன்னலுற்று வாழும் அன்பு நெஞ்சங்களின் இழி நிலையை உலகம் நன்கறியும். நெடுங்காலந்தொட்டே பெற்றிருந்த இறையாண்மையை இழந்து, அரசுரிமையையும் இழந்து இன்று நாடற்ற ஏதிலிகள் போல் வாடுகின்றனர். தன்மானம் தலைதூக்க இழந்த உரிமையை மீட்டிடவீறு கொண்டு எழும் அவ்விளம் அரிமாக்கள் தளராத மனத்துடன் போராடி வருவதை நாமறிவோம். எவ்வளவோ உரிமைகளையிழந்தனர்; கல்வி நிலையங்களில் நுழைவு மறுப்பு; மிகுந்த மதிப்பெண்கள், திறமை பெற்றிருந்தும் அரசுப் பணிகள் மற்றும் பிற பணிகள் தரப்படாமல் புறக்கணிப்பு போன்ற இழப்புகளை அன்றாடம் சந்தித்த வண்ணம் குமுறுகின்ற மனத்துடன் எரிமலையாய்க் குமுறி வாடி வாழுகின்றனர்.

உரிமைகள் பறிபோவதைக்கண்டு குமுறுகின்ற நம் ஈழ உடன் பிறப்புகள் இன்னுயிரையும் தூசென மதித்து ஈழ நாடு காக்கப் போராடுகின்றனர். எத்தனையோ இளைஞர் மணஞ்செய்யாமலும்' பெற்றோர், மனைவி, பிள்ளைகளைப் பிரிந்தும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவற்றை எண்ணிடும் போது "வங்கதேச விடுதலைக்கும், தலாய்லாமா போன்றோர்க்கும் அரசியல் அடைக்கலம் அளிக்க இந்திய நடுவண் அரசு உதவியது போன்று, நம் உடன் பிறப்புகளுக்கும் ஈழ மக்களுக்கும் நாம் உதவிட ஏன் தயங்க வேண்டும்?" என்ற கேள்வி எழுவதில் வியப்பில்லையன்றோ?

ஈழ விடுதலைப் போராட்டத்தில் தொடர்பு கொண்டுள்ளதால் பழி வாங்கல் மற்றும் பொய் வழக்குகளின் பேரில் வஞ்சகமாகப் பல ஈழ இளைஞரைக் கொல்ல இலங்கை இனவெறி அரசு தேடியது. அக்கொடுமையிலிருந்து தப்பவே ஈழத் தமிழர்கள் சிலர் தாய்த் தமிழகத்தை நாடி வந்தனர். அவர்களும் இதுநாள் வரையும் எவ்வகைகேடுமின்றி வாழ்ந்து வந்தனர். சில விரும்பத்தகாத நிகழ்ச்சிகளால் அவர்கள் தளை (கைது) செய்யப்பட்டனர்.

தளை (கைது) செய்யப்பட்டவர்களைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரி, தளை செய்ததற்காகத் தமிழகக் காவல்துறைக்குக் கையூட்டுத் தொகையாகப் பரிசு என்ற பேரில் பத்து இலக்க உருபாவை அளிக்க முன்வந்துள்ளது இலங்கை இனவெறி அரசு, இத்தொகையை இனவுணர்வில்லாத தமிழன் ஏற்றுக்கொள்வான் என்றும், மேலும் இனத்தையே காட்டிக் கொடுப்பான் என்றும் எண்ணுகிறது இலங்கை அரசு. மேற்படி தொகையை நமது காவல்துறை பெற்றால் அது

www.thamizham.net - Free E book No 7521

தன்னையே விற்கும் விலைமகள் செயலுக்கும் கீழான தொன்றும். தன்மானமில்லாதவனே அதனைப் பெறுவான். ஆண்மையுள்ள தமிழன் மேற்படி தொகையினைப் பெற்றுக்கொள்ள மாட்டான்; இனத்தைக் காட்டிக்கொடுக்கவும் மாட்டான். நம் தம்பியர் துயருறும்போது நாம் உதவுவதுதானே அறிவுடைமை. மீறிக் காட்டிக்கொடுத்தால் இரக்கமில்லாமல் அவர்களைக் கொன்றுவிடுவார்களே! எனவே, தன்மானம், நல்லுணர்வு நல்லறிவுள்ள மாந்தன் உரிமையை மீட்டு நிலைநிறுத்த விரும்புவானே அல்லாமல் காட்டிக்கொடுக்க மாட்டான். எனவே, தமிழ்நாடு அரசு இதில் தலையிட்டு அந்த அன்புத்தமிழ் நெஞ்சங்களை மீட்டிடவும் ஈழ விடுதலைக்கு உறுதுணையாக நிற்கவும் வேண்டுகிறேன்.

மாந்த உரிமைகள் நசுக்கப்பட்டு மிகவும் இழிவான நிலைக்குத் தள்ளியதாக அனைத்துலக மாந்த உரிமைக் கழகத்தால் குற்றம் சாற்றப்பட்ட இலங்கை அரசுதான் இன்றும் அதேநிலையைத் தொடர்கிறது. இதில் தலையிட்டு ஈழமக்களை மீட்டிட நடுவணரசையும், தமிழக அரசையும், வேண்டுகிறோம். நம் நாட்டில் நடைபெற்ற குற்றங்களுக்கு நாமே தீர்ப்பு வழங்கவேண்டுவதுடன் இலங்கையிடம் ஒப்படைக்காமல் நமது நாட்டிலேயே வழக்கு நடத்திடவும் ஏற்பாடு செய்யத் தமிழக அரசினை வேண்டுகிறேன். அருள்கூர்ந்து முறைகேடாகத்தெரிந்தே அவ் உள்ளங்களை, புரட்சிக்கனல்களைச் சாவுமேடைக்கு அனுப்ப உடன்போகாமல் இருக்க, மாநில-நடுவண் அரசுகளை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். —க. வேழவேந்தன், அறி. இ. (க.மு.)

உ. த. மு. க. தலைவர், ஆவுடையார் கோவில் வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம்

உ. த. மு. க. பொறுப்பாளர்களின் முகவரி விளக்கச் சுவடி
(பொறுப்பாளர்கள் கவனிக்கவும்)

தலைமைக் கழகத்தினின்று உ. த. மு. க. பொறுப்பாளர்களின் முகவரி விளக்கச் சுவடி ஒன்று அச்சில் வெளிவர விருப்பதால் இதுவரை அமர்த்தம் பெற்ற கழகப் பொறுப்பாளர்கள், எல்லைக்கடவு (Passport) அளவில், தங்கள் மார்பளவுப் புகைப்படங்களை (முழு அளவு புகைப்படம் வேண்டாம்). கீழ்க்காணும் விளத்தக் குறிப்புகளுடன் விரைந்து அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

அமர்த்தப் பொறுப்பு :
பெயர் : (புனை பெயர்களுடன்)
முகவரி :
கல்வி, பிற தகுதிகள் :
பொது ஈடுபாடு (சுருக்கமாக):

பக்கல் : கையொப்பம்

---

www.thamizham.net - Free E book No 7521

என்னைப் பற்றி
நானே கேள்விப்படுவது!

— **பெருஞ்சித்திரனார்.**

முன்னுரை: திருக்குறளைப் படிக்கையில் சில சொற்களுக்கு அவ்வப்பொழுது சரியாகப் பொருள் விளங்குவதில்லை. ஆனால் சில சூழல்களில் எதிர்பாராத வகையில் அவற்றுக்குச் சரியான பொருள்கள் விளங்கிவிடும். அத்தகைய சொற்களில் ஒருணர்வுடைய சொற்கள் சில: **செவிகைப்பச்சொல்** பொறுத்தல், **அகழ்வாரை(ப்)** போலத் தம்மை **இகழ்வார்,** திறனல்ல தற்பிறர் செய்வது, இறந்தார் வாய் **இன்னாச்சொல்,** புறங்கூறிப் **பொய்த்தல்,** புறன்நோக்கிப் **புன்சொல்** உரைத்தல்—முதலியன.

கடந்த நெருக்கடி நிலைக் காலத்தில் (1976) சென்னைச் சிறைக்கு நான் கொண்டு செல்லப் பெற்றபொழுது, நான் போவதற்கு மூன்று நான்கு நாட்கள் முன்னரே அங்கு கொண்டு வந்திருந்த பலரையும் சிறைக்காவலர்கள் அடித்துத் துன்புறுத்தியிருக்கிறார்கள். நான் சிறைக்குள் வந்ததும் என்னை அவ்வாறு அடித்தல் வேண்டா என்று அதிகாரிகள் சிலர் காவலர்களுக்கு முன்கூட்டியே சொல்லியிருப்பார்கள் போலிருக்கிறது; அவர்கள் என்மேல் ஒரு விரல்தானும் வைக்கவில்லை. ஆனாலும் அக் காவலர்களுக்கு அது பொறுக்கவில்லை என்று கருதுகிறேன். உள்ளே நுழைந்ததும் அவர்களுள் ஒருவர் என் பெயரைக் கேட்டார். நான் சொன்னேன். அதை அவர் ஒருமுறையிலேயே விளங்கிக் கொள்ள முடியவில்லை. மீண்டும் கேட்டார்; மீண்டும் சொன்னேன். அப்பொழுதும் அவருக்கு அது விளங்கவில்லை போல் தெரிகிறது. உடனே சினம் பொங்க, 'இன்னும் கொஞ்சம் சத்தமாகச் சொல்லுடா' என்றார். அச் சொல்லைக் கேட்டவுடன் என் செவிகள் யாரோ வலிவாக அறைந்தது போல் 'சிவ்' வென்று சூடேறி 'ஒய்'யென்று ஓர் ஒலியெழுப்பின. 'அதுதான் செவிகைக்கும் சொல்லோ' என்று கூட எண்ணினேன். ஆனால் 'அடா' என்னும் சொல்லைச் சொன்னவுடன் எல்லோருக்குமே அதுபோல் செவியில் சூடேற வேண்டுமே; அப்படி ஒரு சிலருக்குத்தானே ஆகும். சிலருக்கு அப்படி ஆகாதே! எனவே அந்தச் சொல்லுக்கு முழுப்பொருள் அதுவாக இருத்தல் முடியாது என்று கருதினேன்.

இப்படி, ஒரு சொல்லைச் சொன்னால் எல்லாருக்குமே அது கடுமையாக - செவியைச் சூடேற்றுவதாக-அஃதாவது மனத்தாலோ அறிவாலோ அச்சொல்லின் பொருளோ உணர்வோ வாங்கப் பெறுவதற்குமுன், செவியின் புறத்தே வந்து அதன் ஒலி பட்டமட்டிலேயே அது கைக்க—கடுக்க—சூடேறச் செய்ய-வேண்டும். செவி என்பது காதின் புறப்பகுதி. காது என்பது அதன் உட்பகுதி. பொதுவாகப்

www.thamizham.net - Free E book No 7521

பேச்சு வழக்கில் இரண்டு சொற்களையும் ஒரே பொருளிலேயே நாம் ஆள்கிறோம். காதின் புறப்பகுதியாகிய செவியில் வந்து அச்சொல் பட்டவுடனேயே அதன் உணர்வு மின்னாற்றல் போல் உள்ளம், அறிவு, உடல் உறுப்புகள் ஆகிய அத்தனையிலும் பாய்ந்து அவற்றை ஒரு குலுக்குக் குலுக்கி, ஓர் அதிர்ச்சியையும் உண்டுபண்ணி, உயிரில் ஒரு கனப்பை அல்லது ஒரு கைப்பை - ஏற்படுத்த வேண்டும். அதுபோல, அனைவர்க்குமே அவ்வுணர்வை எழுப்பும் சொற்களையே **'செவிகைக்கும் சொற்கள்'** எனலாம். தன்னைப் பற்றிய அத்தகைய சொற்களைப் பிறர் வந்து சொல்லவோ, அல்லது நேரிடையாகவோ தான் கேட்க நேர்ந்தாலும் குடிநலம் கருதவேண்டிய அரசன் அவற்றைப் பொறுத்துக் கொள்ளல் வேண்டும். அத்தகைய மனநலமும் அறிவுநலனும் இயற்கையிலேயே வாய்ந்தவனாக அவன் இருத்தல் வேண்டும் என்பது திருவள்ளுவர் கருத்து. அப்படிப்பட்ட தன்மைகளைத்தான் **'மாண்பு'** என்னும் சொல்லால் அவர் பெருமைப் படுத்துகிறார். ஒரு சிறு சொல்லைக்கூட அன்று-ஒரு கருத்தைக்கூடப் பொறுக்க முடியாத அமைச்சர்களை இன்றைக்கு 'மாண்பு' என்று கூறுவதுபோல் பல நுட்பமான வேறுபாடுகளை இன்று நாம் உணர்வதில்லை. காலத்தால் ஏற்பட்ட மனவுணர்வின் தாழ்ச்சி அது.

இவ்வகையில், திருக்குறட் சொற்கள் பலவற்றுக்குப் பொருந்திய பலபொருள்கள் எதிர்பாரா நேர்ச்சிகளால் எனக்குக் கிடைப்பதுண்டு. அத்தகைய சில, பல சூழல்களை — என்னைப் பற்றி நானே கேள்விப் படுகிற செய்திகளை — அவற்றின் தன்மைகளை இப்பகுதியில் நான் உங்கட்குக் கூறி வர எண்ணியுள்ளேன். தேவை என்று கருதி, நேரமும் வாய்த்தால் இப்பகுதி அவ்வப்பொழுது இடம் பெறலாம். இச் செய்திகளால் உண்மையான உணர்வாளர்களுக்குப் பலவகையான எச்சரிக்கை நிலைகள் உண்டாகும். அவை அவர்தம் முயற்சிகளுக்கு வலிவூட்டக் கூடியன. எனவே பயன் தருவன. சில செய்திகள் சுவையாகவும் இருக்கும்; வியப்பாகவும் இருக்கும். அன்பர்கள் இப்பகுதியைத் தவறாது படிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

துறந்தாரின் தூய்மை யுடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர் (159)

— பெருஞ்சித்திரன்

1. இரண்டு இலக்கங்கள்!

என்மேல் மிகவும் அன்பும் நம்பிக்கையும் கொண்ட கோவை அன்பர் ஒருவர், அண்மையில், அங்குப் பரவலாகப் பேசப் பெறும் செய்தி ஒன்றைப்பற்றி என்னிடம் கூற விரும்பி, 'இஃது உண்மையாக இருக்க முடியாது, இருந்தாலும் உங்களிடம் சொல்ல வேண்டுமே அதற்காகச் சொல்லி வைக்கிறேன்' என்று தொடங்கினார். அச்செய்தி

www.thamizham.net - Free E book No 7521

இது. நாம் நடத்திய உ.த.மு.க. மாநாட்டிற்கு என, தமிழீழத் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் என்னிடம் உருபா இரண்டு இலக்கம் கொடுத்து, அவரையே அம் மாநாட்டுக்குத் தலைவராகப் போடும்படி கேட்டுக் கொண்டாராம். நானும் அதையேற்றுக் கொண்டு அப்படியே செய்தேனாம். தாம் இழந்து வரும் அரசியல் பெருமையைச் சரிகட்டவே இவ்வேற்பாட்டை அவர் செய்து கொண்டாராம். நானும் அதற்கு உடன்பட்டேனாம்.

கோவையிலேயே வேறு ஒரு பகுதியில் இச்செய்தி இன்னொரு வகையாகச் சொல்லப்படுகிறதாம். அஃதாவது நான், இலங்கை சென்றிருந்த பொழுது பல இலக்கக்கணக்கான உருபாக்களை நன்கொடையாகத் திரட்டிக் கொண்டு வந்தேனாம். அதை வைத்துத்தான் நான் உ.த.மு.க. மாநாட்டைக் கூட்டினேனாம். இச்செய்தி அதைவிட கொஞ்சம் உருபா மதிப்பில் உயர்ந்த செய்திதான்.

இவற்றுக் கெல்லாம் நான் என்ன விடை சொல்வது? ஏதோ என்னை ஓர் ஆயிரம், ஐநூறு என்று மதிப்பிடாமல் இரண்டு இலக்கம் மூன்று இலக்கம் என்றாவது மதிப்பிடுகிறார்களே என்று பெருமைப் பட்டுக் கொள்கிறேன்.

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும். (183)

உ. பாவாணரின் ஊடல்!

முன்னுள்ள செய்தியைக் கேட்ட பொழுது, எனக்கு இன்னொரு செய்தி நினைவுக்கு வந்தது. பாவாணர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினின்று நீங்கிக் காட்டுப்பாடியில் குடியேறிய நேரம் அது. ஒருமுறை கடலூரினின்று அவரைப் பார்க்கக் காட்டுப்பாடி சென்ற பொழுது, நான் வந்திருக்கின்றேன் என்று எனக்குக் கதவைத் திறந்து விட்ட அவர், என்னைப் பார்த்த பினனும் என்னிடம் ஏதும் பேசாமலேயே உள்ளே சென்றுவிட்டார். நான் பின்தொடர்ந்து சென்று அவருக்கென வாங்கிச் சென்ற பழங்களை, உள்ளே அம்மாவிடம் (அவர் அப்பொழுது உயிருடனிருக்கிறார்) கொடுத்து விட்டு அவர்முன் இருக்கையில் அமர்ந்தேன். அப்பொழுதும் நெடுநேரம் அவர் என்னிடம் பேசவே இல்லை. நிலையை உணர்ந்து கொண்டு அம்மாவை நோக்கி, 'ஐயா, ஏனம்மா என்னிடம் பேசாமல் இருக்கிறார்' என்று கேட்டேன். அவர்கள் அப்பொழுது சொன்னது எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

'யாரோ அரசியல் தலைவர் உங்களுக்கு அச்சகம் நடத்துவதற்குப் பத்தாயிரம் உருபா அன்பளிப்பாகக் கொடுத்தார்களாம். அதுபற்றி நீங்கள் ஐயாவிடம் ஒரு சொல்லும் சொல்லவே இல்லையாம். வருத்தப் பட்டுக் கொண்டிருக்கிறார்' என்று அம்மா கூறினார்கள்.

www.thamizham.net - Free E book No 7521

நான் உடனே கட கடவென்று சிரித்து விட்டு, அப்படியென்றால் அந்தத் தொகையை வாங்கிய கையுடனே, ஐயாவையன்றோ வந்து பார்த்திருப்பேன். என்மேல் ஐயாவே இவ்வளவு அவநம்பிக்கை கொண்டால், வேறு யாரிடம் போய் நான் நம்பிக்கையை எதிர்-பார்ப்பது? என்று சிரித்துக் கொண்டே கேட்டேன்.

அதுவரை அமைதியாக இருந்த பாவாணர், உடனே என்பக்கம் திரும்பி 'அப்படியானால், அ'து உண்மையில்லையா?' என்று என்னைக் கேட்டார்கள். அவர் முகத்திலே ஒரு மகிழ்ச்சி தோய்ந்திருந்தது. ஆக, அப்பொழுது என் மதிப்பு வெறும் பத்தாயிரம் உருபா. இப்பொழுது அ'து இலக்கக் கணக்காக உயர்ந்திருக்கிறது என்று தானே சொல்லவேண்டும்.

> அறனுக்கம் வேண்டாதான் என்பான் பிறனுக்கம்
> பேணாது அழுக்கறுப் பான். (163)

௩. சித்திரமும் கைப்பழக்கம்!

அண்மையில் நண்பர் ஒருவர் என் பெயருக்கு ஒரு விளக்கம் கூறியிருக்கிறார். 'சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்-கம்' எனவே, கைப் பழக்கம் என்றால், '**கையால் வாங்கி வாங்கிப் பழக்கம்**' என்பது பொருள். பெருஞ்சித்திரன் என்றால், பணத்தைக் கைகளால் வாங்கி வாங்கிப் பெரும் பழக்கம் உடையவர் என்பது பொருள் என்று அவர் கூறியுள்ளார்.

என்ன செய்வது? அவரவர்களுக்குத் தெரிந்த சொல்லாராய்ச்சி யில் ஈடுபடுவதை நாம் எப்படித் தடுக்க முடியும்? இதைவிட அவர் செய்த இன்னொரு சொல்லாராய்ச்சி எனக்கு இன்னும் வியப்பையும் அதிர்ச்சியையும் தந்தது.

> சொற்கோட்டம் இல்லாது செப்பம் ஒருதலையா
> உட்கோட்டம் இன்மை பெறின். (119)

4. பாப்பா என்றால் யாவர!

பெரும்பாலும் சில பழக்கங்கள் என்னிடம் உண்டு. நெருக்க மாகப் பழகும் தென்மொழி அன்பர்கள், என்னைக் காணவருகிற பொழுது அவர்களின் வீட்டார் நலன்களைப் பற்றி உலகியல் நிலையில் நான் நலம் உசாவுவது வழக்கம். பொதுப் பண்பாடும் அதுதானே? வந்தவரிடம் 'பாப்பா, குழந்தைகள் எல்லாம் நலமா?' என்று கேட்பேன். **பாப்பா** என்பது அவர்களுடைய துணைவியைப் பற்றி நான் குறிப்பிடுகிற குறிப்புச் சொல். அவர்களும் அதை விளங்கிக் கொண்டு தக்க விடை கூறுவார்கள். இச்சொல்லை நான் பயன்படுத்-துவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. பெரும்பாலும் அவ்வாறு கேட்கப் பெறுகின்ற அவ்வன்பர்களுடைய துணைவியர் எல்லாரும்

www.thamizham.net - Free E book No 7521

ஏறத்தாழ என் பிள்ளைகளுடைய அகவையுடையவர்களாக இருப்பார்கள் என்பது ஒன்று. இரண்டாவது, அவர்களில் பலருடைய பெயர்களை நான் நினைவில் வைத்துக் கொள்வது இல்லை. எனவே சட்டென்று இதை ஒரு பொதுச் சொல்லாகப் பயன்படுத்தி விடுவேன். இதற்கு இப்பொழுது அந்த அன்பரால் ஒரு புதுப்பொருள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டதும் எனக்கோர் அதிர்ச்சி ஏற்பட்டு விட்டது. பாப்பா என்பது பா,பா என்றாகி 'வா, வா' என்பது போல் பொருள் தருகிறதாம், அவர் சொல்கிறார். இன்னும், பாப்பா என்பது பாபா என்றாகிப் (புட்டபர்த்தி) சாயி பாபாவைக் குறிக்கிறதாம். '(புட்டபர்த்தி) சாயிபாபா' என்ன செய்கிறார் என்பதுதான் உங்கட்குத் தெரியுமே' என்று அந்த நண்பரிடம் என்னைப் பற்றி விளக்கியிருக்கிறார்!

இப்பொழுதுதான் 'செவிகைப்பச் சொற் பொறுத்தல்' என்னும் தொடருக்குச் சரியான பொருள் எனக்குத் தெரியவருகிறது. நான் என்ன செய்யட்டும்? தமிழ் அந்த அளவுக்குச் சொல்லாராய்ச் சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளது!

அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும். (185)

5 நான் என்ன சாதி ?

'தென்மொழி'யின் தொடக்கக் காலத்திலேயே நான் என்ன சாதி என்று கேட்டுத் தெரிந்து கொள்வதில் பலருக்கு ஆர்வம் அளவுக்கு மேல் இருந்தது. அவரவர்கள், நான் அவர்கள் சாதியாக இருந்து விட மாட்டேனா என்று ஏக்கத்துடன் இருந்ததும் எனக்குத் தெரிந்தது. சிலர் அவ்வாறே நினைத்தும் மகிழ்ந்திருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். பலர் என்னிடம் நேரிடையாகக் கேட்கத் தயங்கினார்கள். சிலர் வேறுவகையான ஆராய்ச்சியில் எல்லாம் ஈடுபட்டார்கள். சாதி ஆசையையும் அங்காப்பையும் விடாத ஒரிருவர் என்னை நேரிடையாகவே ஒரிருமுறை கேட்டார்கள். அவர்களுக்கெல்லாம் நம் கொள்கையையே விடையாகக் கூறி அவர்களது சின்னத்தனமான ஆசையைக் கடிந்திருக்கின்றேன்.

பாவாணரைப்பற்றியும் இந்தச் சிக்கல் இருந்தது. ஏனோ தெரியவில்லை; சிலருக்கு அவர்கள் கற்ற கல்வியை விட, கொண்ட கொள்கையை விட, இந்தச் 'சாதி'ப் பித்து மிகுதியாக வளர்ந்திருக்கிறது. கல்லாதவர்களைவிடக் கற்றவர்களிடந்தான் இப் பித்து மிகுதியாகவிருக்கிறது என்றுஞ் சொல்லலாம். இதில் சிலர் போலித்தனமான ஒருவகைப் பெருமையையே வைத்திருக்கிறார்கள். வெளிநாட்டிலிருந்து வந்த சாதிப்பற்று மிக்க அன்பரொருவர் 'பாவாணர் இன்ன சாதியென்று சொல்லுகிறார்களே; உண்மையா' என்று என்னிடம் ஒருமுறை கேட்டார். 'ஏன், அதைத் தெரிந்து கொண்டுதான

www.thamizham.net - Free E book No 7521

அவர் நூல்களை நீங்கள் படிக்கத் தொடங்குவீர்கள்?' என்று நான் அவரைக் கேட்டேன். அதற்கவர் 'இல்லை இல்லை; சும்மா கேள்விப் பட்டேனே என்றுதான் வினவினேன்' என்று பல்லை இளித்தார்.

அண்மையில் ஒருவர் (மிக மிக நெருக்கமான ஒருவர்) இந்த ஆராய்ச்சியில் ஒரு முடிவைக் கண்டுபிடித்திருக்கிறார். சில நேரங்களில் சிலரைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, 'அவர் நம்ம ஆள்' என்று அவரிடம் குறிப்பிட்டிருக்கின்றேன். அதனால் நான் அவர் சாதிதான் என்று நினைத்துக் கொண்டாராம். இன்னும் சொன்னால் அவர் அப்படி நினைத்துக் கொள்ளட்டும் என்றே நான் அவ்வாறு சொல்லி யிருக்கின்றேனும்; கண்டு பிடித்திருக்கிறார்.

தெனாலிராமன் கதையில் ஒரு கதை உண்டு. 'தனக்குள்ளது உலகத்திற்கு' என்பது அது. அதில் அரசனின் பணியாள் ஒருவன் தன்னிடம் கொஞ்சம் பொன் உள்ளதைக் கொண்டு, அரசன் கேட்டதற்கு, மக்கள் எல்லாரும் கொஞ்சம் கொஞ்சம் பொன் உள்ளவர்களாகத்தான் இருக்கிறார்கள் என்று கூறுவான். அரசன் அமைச்சரைக் கொண்டு அவனிடமுள்ள அந்தக் கொஞ்சம் பொன்னையும் எடுத்துக் கொள்ளச் செய்த பொழுது, அந்தப் பணியாள் அரசனிடம் முக வாட்டமாக, 'இந்த நாட்டிலுள்ள மக்கள் கொஞ்சம் பொன்னுக்கும் வக்கற்றவர்களாக உள்ளார்கள்' என்பான்.

அந்தப்படி, நான் 'நம்மாள்' என்பது, 'நம் கொள்கையுள்ள ஆள்: அல்லது தமிழனத்தவர்; அல்லது பிராமணரல்லாதவர்' என்று இடத்திற்குத் தக்கபடி பொருள் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இருக்கும். சாதியுணர்வு நெஞ்சில் நெருப்பாய்க் கனன்று கொண்டிருக்கும் சிலர்க்கு அவ்விடை வேறு பொருளில் பட்டிருக்கின்றது. அதற்கு நான் என்ன செய்வது?

கடைசியில் 'நான் வேறு சாதி; என் துணைவி வேறு சாதி' என்று கண்டு கொண்டாராம். அப்படிக் கண்டு கொண்டதுடன் நிற்காமல் தன் சாதியை விட என்சாதி மெலிந்த சாதி என்று வேறு பெருமைப் பட்டுக் கொண்டிருக்கிறார்? என்ன செய்வது? மாந்தன் படிநிலை வளர்ச்சிக் காலந்தொட்டு, சாதியுடனேயே இறைவனால் படைக்கப் பெற்றிருக்கின்றான் என்று பார்ப்பனர் சொல்லும் வருணாசிரம தர்மத்தைக் கடைபிடிப்பதில் அவர்க்கு அத்துணை அழுத்தமான நம்பிக்கை! ஆனால் புறத்தே பார்ப்பனியத்தைச் சாடுகின்ற கொள்கையை உடையவர், அவர்! அறிவியலும் படித்தவர். என்ன செய்வது? அறிவியல் வளர்ந்திருப்பது எல்லாம் வெறும் கருவி அளவில்தானே! மன அளவை அதால் மாற்றிவிட முடியுமா, என்ன?

பகுத்தறிவு, பொதுமை, தமிழ், தமிழினம், — மண்ணாங்கட்டி என்று பேசுவதெல்லாம் வெறும் கவர்ச்சிக்காகவும் காசுக்காகவும் என்று தானே பலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்! சாதியைக் கேட்டுத்தானே அறிவையும் கருத்தையும் கொள்கையையும் மதிப்-

www.thamizham.net - Free E book No 7521

நந்தமிழர் பரம்பரையே!

பாவலர் கண்ணல். க, மு.

தெருவெங்கும் செந்தமிழைத்
தேக்கி வளர்க்காமல்
அருந்தமிழர் இல்லத்தில்
அழகுதமிழ் முழக்காமல்
கறைப்படிந்த திரைப்படத்துக்
கன்னியரை எண்ணிஎண்ணி
உருகும் தமிழ்இளைஞர்
உணர்வதுதான் எக்காலம்?

தங்கள் இல்லத்தில்
தவழுகின்ற குழந்தைக்குத்
திங்கள் தாய்த்தமிழில்
திருப்பெயரைச் சூட்டாமல்
பொங்கும் உணர்வால்
திரைப்படத்துக் கூத்தியர்மேல்
எங்கள் தமிழிளைஞர்
எண்ணங்கள் கொள்ளுவதேன்?

சாலை வழியெல்லாம்
சாகாத செந்தமிழை
நாளும் வளர்ப்பதற்கு
நாமென்ன செயல்செய்தோம்?
மூலை முடுக்கெல்லாம்
முத்தமிழே முழங்குதற்குக்
காலைமுதல் மாலை வரை
கடனுற்ற ஏன் மறந்தோம்?

தூயதமிழ் முழங்கத்
துறைதோறும் தமிழ்வளர
ஓயாமல் பாடுபடும்
உயர்ந்ததமிழ் நெஞ்சத்தைச்
சாய வைப்பதற்குச்
சளைக்காமல் போராடும்
நாய்கள்தம் கூட்டமா?
நம்தமிழர் பரம்பரையே!

(முன்பக்கத் தொடர்ச்சி)

பிடுகிறார்கள்! இந்தத்தமிழினம் என்றைக்குத்தான் உருப்படுமோ? இத்தகைய சாதிப் பேய்களும் வெறியர்களும் உள்ளவரை அஃது எங்கே உருப்படப் போகிறது!

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையிற் பேதையார் இல். (834)

(தொடரும்)

www.thamizham.net - Free E book No 7521

தமிழீழ விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு அடைக்கலம் தருக!

அவர்களைச் சிங்களவரசிடம் ஒப்படைத்திட வேண்டாம்! அவர்களின் உயிரை இந்தியவரசு காக்கட்டும்!

உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அறிக்கை!

இலங்கை, இறுதியாக பிரிட்டிசு ஆட்சியிலிருந்து விடுபட்ட நாளிலிருந்து கடந்த முப்பதாண்டுகளாக, அதன் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய சிங்களவர்களால், அங்குள்ள சிறுபான்மை இனமாகிய தமிழர்களுக்கு நேர்ந்துவரும் கொடுமைகளும் துன்பங்களும், அவர்களின் உரிமைகளுக்கும் உடைமைகளுக்கும் ஏற்பட்ட இழிவுகளும் அழிவுகளும்; அங்குள்ள தமிழ்த்தாய்மாகளுக்கு உண்டான அவமானங்களும் உலகம் அறிந்தவையே.

ஈராண்டு மூவாண்டுகளுக்கொருமுறை அங்கு நேர்ந்த நேர்கின்ற இனக்கலவரங்களால் உயிர் மாண்ட தமிழ்மக்களும், அழிக்கப்பட்ட சொத்துகளும் ஏராளம். இஃது ஒரு துன்பத் தொடர்கதையாகவே அங்கு நிகழ்ந்து வருவதை உலகநாடுகள் பலவும் கண்டித்துள்ளன.

பாராளுமன்ற நடைமுறைகளாலோ அறப்போராட்ட வழிகளினாலோ இதற்கொரு தீர்வு காண முடியாத நிலையில், கொடுமைகளுக்குள்ளான அங்குள்ள தமிழர்கள் தங்கள் அரசியல் உரிமைகளுக்கும், வாழ்வியல் நலன்களுக்குமாகத் தொடர்ந்து போராடி வருகின்றனர். அதன் காரணமாகத் துன்பத்திற்குள்ளான தமிழர்கள் பலர், இலங்கையை விட்டு வெளியேறும் கட்டாய நிலைக்கு உட்பட்டு, அண்டை அயலிலுள்ள இந்தியாவிற்கும் பிற நாடுகளுக்கும் சென்று உயிர்பிழைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களில் பலர் ஏதிலிகளாகத் தமிழகத்திற்கும் வந்து மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் குடியேறி அன்றாட வாழ்விற்கும் அமைதிக்கும் வழிவகை காணாமல் துன்பப்பட்டு வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் அங்குள்ள துன்பங்களுக்கிடையே, உரிமைக்குப் போரடிய தீவிர உரிமைப் போராட்ட இளைஞர்கள் சிலர், சிங்களப் படையினராலும் காவல்துறையினராலும் தங்களுக்கேற்பட்ட கொடுமைகளினின்று தப்பித் தமிழகம் வந்து, தலைமறைவாக வாழ்ந்து தங்களின் போராட்ட முயற்சிகளுக்குத் தாய்த்தமிழகத்தில் ஆதரவு தேடும் பணியில் ஈடுபட்டு வந்தனர்.

அவர்களில் சிலர், அண்மையில் தங்களுக்குள் கொள்கை வழியிலும் போராட்ட முறையிலும் வேறு ஏதோ சில வகைகளிலும், பூசல்களை விளைவித்துக் கொண்டு, இறுதியில் ஒருவர்க்கொருவர் தாக்குதலில் ஈடுபட்டு, அதன் விளைவாகக் காவலர்களால் பிடிபட்டுக்

www.thamizham.net - Free E book No 7521

காவலில் வைக்கப்பெற்றுப் பலவகை உசாவலுக்கும், ஆய்வுக்கும் உட்படுத்தப்பட்டு வருகின்றதை நாம் அறிவோம்.

அவர்கள் செய்த குற்றங்களாகத் தமிழகக் காவல்துறையினர் அவர்களின்மேல், தேவையான நுழைவிசைவு(விசா)இல்லாமல் இங்கு வந்ததும் கருவிகள் வைத்திருந்ததும், ஒருவர்க்கொருவர் தாக்குதலில் ஈடுபட்டதுமாகிய குற்றங்களைச் சுமத்தலாமென்று கருதப்படுகிறது.

இதுதவிர, இதற்கிடையில் சிங்கள அரசுவேறு, அந்நாட்டுக் காவல்துறை அதிகாரிகளை இங்கனுப்பி, இந்திய அரசுடன் தொடர்பு கொண்டு, ஏற்கெனவே அவர்களால் தேடப்பட்டு வந்ததாகக் கூறப் பெறும்,அவ்விளைஞர்களைத் தங்களிடம் ஒப்படைக்குமாறு கோரி வருகிறது. அவர்களைப் பிடித்த தமிழகக் காவல்துறைக்கும் ஒரு பெரும் பரிசுத்தொகையைத் தருவதாக அறிவித்து ஆசை காட்டி உள்ளது.

இவ்விக்கட்டான நிலையில்,உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாம் நம் கருத்துகளைத் தமிழக அரசுக்கும், தில்லியிலுள்ள நடுவண் அரசுக்கும் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

இங்குப் பிடிபட்டுக் காவலில் வைக்கப் பெற்றுள்ள இளைஞர்கள் ஏற்கனவே சிங்கள அரசினரால் பலவகைக் கொடுமைக்கும் நீண்ட காலச் சிறைத் தண்டனைக்கும் ஆளானவர்கள் என்பதை, இங்குள்ள ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் மறந்துவிட வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவர்கள் மீண்டும் சிங்கள அரசிடம் ஒப்படைக்கப் படுவார்களானால் அவர்கள் உயிர்களுக்கு எத்தகைய விளைவுகள் நேரும் என்பதை நாம் மாந்த நேய நோக்கத்துடனும் கழிவிரக்கத்துடனும் எண்ணிப் பார்க்கத் தவறிவிடக் கூடாது.

மேலும் குற்றம் செய்தவர்களாக இங்குப் பிடிபட்டுள்ளவர்கள் இந்நாட்டு மக்களின் உடைமைகளுக்கோ உயிர்களுக்கோ எவ்வகை ஊறும் விளைவித்தவர்களல்லர். அவர்கள் தங்கள் கொள்கைகளுக்காகவும் நடைமுறைகளுக்காவும் தங்களுக்குத் தாங்களே போராடிக் கொண்டவர்களாவர்கள். அந்த வகையில் இந்நாட்டுச் சட்டபடி, அவர்களின் குற்றங்களுக்கேற்ப அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களாகவே இருக்கலாம். இயல்பான அந் நடைமுறைப் போக்கில் அவர்கள்மேல் எடுக்கப்பெறும் நடவடிக்கைகளில் யாரும் கருத்து வேறுபாடு கொள்ள முடியாது.

ஆனால், நீண்டகாலக் கொடுமைகளுக்கும் உறுப்புச்சிதைவு (சித்திரவதை)களுக்கும், அழிவுக்கும், இழிவுக்கும் ஆளாகி, மாய்ந்து மடிந்து கொண்டுள்ள தமிழினத்தின் உரிமைப்போராட்ட மீட்பர்களாகிய இவ்விளைஞர்கள் சிங்கள வெறியர்களிடம் ஒப்படைக்கப்படுவது என்பது நினைவுக்கும் எட்டாத கொடுமை வாய்ந்ததாகும். அதன் முடிவை எண்ணிப்பார்க்கவும் உயிர் நடுங்குகிறது.

www.thamizham.net - Free E book No 7521

தமிழனின் காட்டிக்கொடுக்கும் தன்மையைப் பரிசுத்தொகையின் ஏற்ற இறக்கத்திற்கு விலைபேசும் சிங்கள அரசின் பின்னணியில் அமைந்த கொடுமையையும், அதன் வேண்டுகோளுக்குச் செவிமடுக்கும் இழிவையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

பாலத்தீன விடுதலைப்போராளிகளை இயல்பான மாந்த உரிமை நேயத்துடன் நாம் வரவேற்கவும் வாழ்த்தவும் பாராட்டவும் செய்கிற அதே உணர்வுடன், தமிழீழ உரிமைப் போராட்ட இளைஞர்களின் தந்நலமற்ற ஈக(தியாக) உணர்வுகளையும் விடுதலை வேள்விகளையும் நாம் மதித்திட வேண்டும்.

எனவே, அவர்களை வல்லதிகாரமும், பொய்க்குற்றச்சாட்டு உணர்வும்,கொடுமை மனமும் கொண்ட சிங்கள அரசிடம் ஒப்படைப்பது,உலக மாந்தநேய உணர்வுக்கும்,உரிமை வரவேற்பிற்கும், சிறந்த மக்கட்பண்பிற்கும் உகந்ததாகாது என்பதை அன்புடனும் அதே பொழுது உரிமையுடனும் நம் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு ம.கோ. இராமச்சந்திரன் அவர்களுக்கும் இந்தியத் தலைமை அமைச்சர் திருவாட்டி இந்திராகாந்திக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். அனைத்துலக மக்கள்நல உரிமைச்சட்டமும் சிங்களவர்களிடம் அவ் இளைஞர்களை ஒப்படைப்பதை ஏற்றுக்கொள்ள இசைவளிக்காது.

ஆகவே, இக்கால் இங்குக் காவலில் வைக்கப்பெற்றுள்ள தமிழீழ விடுதலைப் போராட்ட இளைஞர்களை இந்நாட்டில் அவர்கள் செய்த சிறு குற்றங்களுக்கு ஏற்ப இங்குள்ள அரசியல் சட்டப்படி தண்டிக்க யாதொரு தடையும் இல்லை. ஆனால், தண்டனைக்காலம் முடிந்ததும், அவர்கள் மேலும் இத் தாய்திரு நாட்டிலேயே தங்கி அடைக்கலம் பெற்றிருக்கப் போதுமான தங்குஇசைவை அளித்து அவர்களின் உயிரைக்காக்க வேண்டுமெனப் பல்லாற்றானும் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறோம். o

---

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

லாது.இயக்கத்தால்தான் இயலும்.அதுவும் தங்களைப் போன்ற, மொழி இன உணர்வு மிக்கத் தன்னலம் அற்றவர்கள் தொடங்கும் இயக்கத்தால்தான் இயலும். எனவே நமது இயக்கம் இருண்ட தமிழகம் ஒளி பெற்று உலக மக்கள் அனைவரது பார்வையிலும் படும்படியான நிலை ஏற்படவேண்டும். அந்நிலையை ஏற்படுத்துவது நமது இயக்கமாகத்தான் இருக்க வேண்டும். இதை நிறைவேற்ற ஆயிரமாயிரம் பேர்கள் அணியமாய் உள்ளனர். அணி திரள்வோம்.

தீமைகள் மலியும்போது,பெரும் மாற்றங்கள் நிகழ்வது வரலாறு வழங்கும் பாடம். இன்று தமிழகம் குமுகாயச் சீர்கேட்டின் உச்ச நிலையை அடைந்துவிட்டது.மாற்றம் நிகழ்வது உறுதிசெய்யப்பெற்ற

(தொடர்ச்சி 24- ஆம் பக்கம் பார்க்க)

www.thamizham.net - Free E book No 7521

தமிழரே உறங்காதீர்!

பண்டிதர். கா. பொ. இரத்தினம். க. மு.
(இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்)

என்னருமைத் தமிழர்காள்! எழுச்சிமிக்க பெருந்தகையீர்!
பொன்னடிக்கு வணக்கம்நான் புகலுமிந்த உண்மையினை
உன்னிஉன்னிப் பார்த்துங்கள் உளத்தினிலே பதியுங்கள்;
என்னவந்த தெமக்கிங்கே என்றினிமேல் உறங்காதீர்!

மொழியுரிமை பறிபோனால் முழுவாழ்வும் அழிந்துவிடும்;
பழியுடைய குலத்தினராய்ப் பணிந்தொதுங்கி வாழாமல்
இழிவகற்றும் வழிவகுத்தே இனியதமிழ் அரசுபெற
எழிலுடைய தமிழர்காள் எண்ணிஎண்ணி முயன்றிடுவீர்!

"நீரழிக்கச் செல்லழிக்க நெருப்பழிக்க நிலைத்ததமிழ்ச்
சீரழிக்க வல்லார்யார் செப்பிடுவீர்" என்பீரேல்,
தாரழிக்கப் பார்த்திருந்தீர் தயங்காமல் தமிழினத்தின்
பேரழிக்க முயல்கின்றார் பேடிகள்போல் வாழாதீர்!

இவர்செய்வார் அவர்செய்வார் எமக்கென்ன என்றிருந்தால்
எவர்செய்வார் தமிழ்ப்பணிகள்? எமக்குற்ற சிலபெரியோர்
அவஞ்செய்தே கெடுத்துவிட்டார் அவருக்கும் அறிவூட்டித்
தவஞ்செய்தே பெறும்வெற்றி தழைத்தோங்கப் பணிபுரிவீர்!

மொழியுரிமை தனக்குவிலை மொழிந்தெங்கள் குலத்தினுக்கே
பழியுரிமை கொள்ளுகின்ற பண்பில்லாச் சிறியோர்கள்
விழியிழந்தே வாழ்ந்திடற்கு விழைகின்றார்; இவர்களைநல்
வழியினிலே புகுத்தியிந்த வசையினையும் நீக்கிடுவீர்!

என்றுமெங்கும் தமிழென்றே எத்திசையும் குரலெழுப்பித்
துன்றுமிடர் சூழ்ந்தாலும் துலங்குதமிழ்த் தாயினுக்கே
இன்றுதொட்டு முதன்மையினை எம் வாழ்விற் கொடுத்திடுவோம்
என்றுறுதி கொள்வீரேல் எண்ணியன அடைந்திடுவீர்!

(23- ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறைகூவலே இது. எனவே அம் மாற்றம் நன்மாற்றமாக அமைய நமது இயக்கம் துணைபுரிய வேண்டும். இஃது எளிய செயல் அன்று; அரியதே. அரிய செயல்தானே வரலாறு படைக்கிறது. "ஞாலம் கருதினும் கை கூடும்" என்பது பொய்யா மொழியல்லவா ? உழைக்காமல் உயர்வேது? அரிய வரலாறு படைத்தவர்கள் அவ் வரலாற்றை மலர்ப் படுக்கையில் படுத்துக்கொண்டு பெறவில்லை. செயல் வீரர் அணி மிகக் கவனத்துடன் அமைப்பது மிக இன்றியமையாதது. ஏனென்றால் "வினைவகையான் வேறாகும் மாந்தர் பலர்" அத்தகைய மாந்தர்களை தொடக்கத்திலேயே இனம் கண்டு கொள்வது மிகத் தேவை. வாழ்க உ. த. மு. க.. வளர்க தமிழ்!

—சோ. க. குமாரசாமி, சோமன்கோட்டை, பெரியார் மா. வ.

www.thamizham.net - Free E book No 7521

உலகத் தமிழினப் பார்வைக்கு!

—கோ. மு. பெருமாள். அறி. இ.

உ. த. மு. க. தொடக்க மாநாட்டின்போது தமிழீழத் தலைவர் நாவலர் அமிர்தலிங்கனார் பேசிய பேச்சு இன்றைய நூற்றாண்டுத் தமிழர்கள் காலத் தாழ்வின்றி உடன் ஆற்ற வேண்டிய கடமைகளை நன்கு வலியுறுத்தியது. இதில் ஒரே ஒரு கருத்தைப் பற்றி மட்டும் எனது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள விழைகிறேன். 43 நாடுகளில் தமிழர்கள் பரவிச் சிதறி வாழ்கிறார்கள். ஆனால் ஒரு சில நாடுகளில் உள்ள தமிழர்கள் மட்டுமே தமிழைப் பேச, எழுத அறிந்துள்ளனர் என்ற வருந்தத் தக்க கசப்பான செய்தியை நாவலர் அமிர்தலிங்கனார் எடுத்துரைத்து, இது குறித்துத் தமக்கு ஏற்பட்ட பட்டறிவைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். (தெ. மொ: சு. 18; ஒ. 7)

இத்தகு அழிவு நிலைக்கும், இழிவு நிலைக்கும் காரணங்கள் தமிழர்களாலேயே உண்டாக்கப்பட்டன என்பது தெளிவு. 'மொரீசியசு தீவில் எங்கள் தமிழர்' என்னும் சிறு நூலில், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க நிறுவனரான குரும்பசிட்டி இரா. கனகரத்தினம், மொரீசியசு தீவில் இத்தகு நிலைக்குக் கரணியம் என்ன என்பதைக் கூற வந்தபோது, அந்நாட்டு 'மலர் ரதம்' என்ற ஓர் இதழிலிருந்தே குறிப்பு எடுத்துக் காட்டி விளக்குகின்றார். "தொடக்கக் காலத்தில் தமிழ்மொழியைப் பேணி வந்தனர் தமிழர்கள். இவர்கள் குடியேறி வாழ்ந்த சிற்றூர்களில்கூட மொழியறிவுள்ளவர்கள், சிறுவர்களுக்குத் தமிழைக் கற்பித்து வந்தனர். ஆனால், காலப் போக்கில் பெற்றோர்கள், தம் மக்களிடத்தே 'கிரியோல்' (கொச்சை பிரெஞ்சு) மொழியில் உரையாடத் தொடங்கினர். இன்னும், செல்வர்கள் தமக்கிருக்கும் செல்வச் செருக்கினால், தம் மக்களுக்கு ஆங்கிலமும் பிரெஞ்சும் புகட்டத் தொடங்கினர். இவ்வாறு மெதுவாகத் தமிழ்மொழியில் வெறுப்பும், அயல் மொழிகள் மீது நாட்டமும் வளர வழி வகுத்துக் கொண்டனர். பிரெஞ்சும் ஆங்கிலமும் புதிய மொழிகள் என்றும், புகழும் பெயரும் இம்மொழிகளை அண்டினோரை அகலாது வந்து சேரும் என்றும் புதிய கோட்பாடுகளைக் கிளப்பி விட்டனர். தமிழால் கிடைப்பது யாதும் இல்லை என்று அகங்குளிரக்கூறி, பெற்ற தாயை எள்ளி நகையாடினர். மனைகளிலும் பள்ளிகளிலும் தவழ்ந்த தமிழைக் மெதுவாகக் கோயில் பூசாரிகளின் மொழியாக்கிவிட்டுத் தம்மைத் தாமே பாராட்டிக் கொண்டனர்." இவ்வாறுதான் மொரீசியசு நாட்டில் தமிழரின் தனித்தன்மை சிதைவுறும் நிலை ஏற்பட்டது. இதே காரணங்கள், மொரீசியசு நாட்டுக்கு மட்டுமன்று, தமிழினத்தவர் வாழும் எல்லா நாடுகளுக்கும் பொருந்தும். இன்றைய தமிழ்நாட்டுக்கும் இது மிகப் பொருந்தும். நம் தமிழகத்திலே, நடுவண் அரசின் கல்வித் திட்டத்தைச் சார்ந்த பள்ளிகள், மற்றும் புற்றீசல்கள்போல் வளர்ந்திருக்கும் ஆங்கில வழிப்பள்ளிகளில் தம் குழந்தைகளைப் பயில வைக்கும் பெற்றோர்கள், இரண்டாம் மொழியாகக்கூடத்

www.thamizham.net - Free E book No 7521

தமிழைப் படிக்கவைக்க வேண்டும் என்னும் அக்கறை இன்றி இந்தியையும், சமற்கிருதத்தையும் பயில வைத்துத் தமிழை அறியா திருக்கும் நிலைக்குத் தம் குழந்தைகளை ஆட்படுத்தும் இழிசெயலைச் செய்யத் தயங்குவதில்லை. அது மட்டுமன்று, வீட்டிலும் தங்கள் பிள்ளைகளோடு ஆங்கிலத்திலேயே பேசிக் கொண்டு, முற்றிலுமாகத் தமிழைத் துடைத்தெறிந்து விட்ட குடும்பங்கள் எத்தனையோ இருக் கின்றன — அத்தகைய குடும்பங்கள் மேலும் மேலும் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. இஃது ஒரு வகை 'வருணாசிரம' மேலின முதலாளிய மனப்பாங்கு என்பதில் ஐயமில்லை. இதை இந்தத் தலை முறையில் தகர்த்தெறிந்திட வேண்டும். இன்றேல் உலக அரங்கில் தமிழினம் காலூன்ற முடியாது. **உலகில் தமிழர்கள் யாவரும் முத லில் தமிழில் பேசவும் எழுதவும் தெரிந்திருக்க வேண்டும்.** தங்கள் குழந்தைகளுக்கு எப்பாடு பட்டேனும் தமிழைக் கற்றுத் தர வேண் டும். தமிழை எழுதப் படிக்கத் தெரிந்த தமிழனுக்குத்தான் தமிழு ணர்வு வருவதற்கு வாய்ப்பு உண்டே தவிர, எழுதப் பேசத் தெரியாத வேறொருவனாகவே உருமாறிவிட்ட தமிழனுக்குத் தமிழுணர்வு வருவது யாங்ஙனம்? உலகத் தமிழர்கள் அனைவரும் இம் முயற்சியில் ஒருவருக்கொருவர் ஒத்துழைக்க வேண்டுவது மிகவும் இன்றியமையாதது.

இவ்வகையில் தமிழ்நாட்டு அரசும் விழிப்போடு செயல்பட வேண்டும். பொதுவாக வெளிநாட்டுத் தமிழ் நிறுவனங்களோ, மற்றைய அரசு அமைப்புகளோ, தமிழர் சிக்கல் குறித்து இந்திய அரசுடனும், அல்லது அந்நாட்டு இந்தியத் தூதரகங்களுடனும் தொடர்பு கொள்ளும்பொழுது, அவர்களுக்கு எந்த வகையான ஒத் துழைப்பும் கிடைப்பதில்லை. மாறாக இந்தி மயமாக்கும் முயற்சியை அவ்விடத்தும் கைக் கொள்கின்றனர். தமிழ் வழங்கும் நாடுகளுக்கு அவர்கள் விரும்பும் திரைப்படச் சுருள்கள், தொலைக்காட்சி நாடாப் பதிவுகள் ஆகியவற்றைக்கூட அனுப்பித்தர இந்திய அரசுக்கு மனம் வரவில்லை. எனவே தமிழைக் கற்றுத் தர அந்நாடுகளுக்கு உதவ இந்திய அரசு முன்வரும் என எப்படி எதிர்பார்க்க இயலும்?

இவ்வகையில் தமிழகஅரசு சிறப்பாகச்செயல்பட முடியும். தமிழ் நாட்டு அரசு மட்டுமன்று; தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், மதுரையில் நிறுவப்படவிருக்கும் உலகத் தமிழ்ச் சங்கம், மற்றும் தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்கள் யாவும் எத்தனையோ செய்ய இயலும். ஆங்கிலம், பிரெஞ்சு, இசுப்பானியம், போர்த்துக்கீசியம், டச்சு ஆகிய குடியேற்ற நாட்டு மொழிகளின் மூலமாகக் கற்றுத்தரும்படியான, அடிப்படையான தமிழ்ப்பாட நூல் களை ஆக்க வேண்டும். மேல்நிலையிலும் தமிழ்ப் பாடநூல்களை வெளி யிட வேண்டும். அவை அனைத்தையும், தமிழர்கள் வாழும் நாட்டு அரசுகளுடனும் அல்லது அங்கு வாழும் தமிழ் அமைப்புகளுடனும் தொடர்பு கொண்டு அவற்றை அனுப்பி வைக்க வேண்டும். இவ்

www.thamizham.net - Free E book No 7521

அரசுக்கு ஒரு வேண்டுகோள்!

தமிழில் அன்று, தமிழ் எழுத்துகளில் சொற்களிலெழுத அரசுகட்டளையிடுக!

—புலவர் அ. கோவிந்தராசனார்,

"தமிழகவரசின் அலுவலகங்களில் எழுதும் கடிதம் மற்றும் பதிவேடுகள் தமிழில்தான் எழுத வேண்டும்" எனப் போடப்பட்டுள்ள ஆணையால் இப்பொழுது மட்டுமல்லாது வரவிருக்கின்ற மன்பதையும் அடையவிருக்கும் நன்மை அளவிடற்கரியது. இதனால் தமிழகம் தன்னறிவோடு வளர்ந்து மேன்மையுற்றுத் திகழும் என்பது உறுதியே. எனினும் எடுத்துக் காட்டாக,

"Aankila eluthukalal Tamilin solloly maaraamal eluthinaalum tamililthaan eluthiyathaagum allavaa? Eluthu Aankila eluthukalaal eruppinum Aankila moliyaagaathu".

மேலும் இந்த எடுத்துக்காட்டை நான் தமிழில் எழுதவில்லையென்று சொல்ல முடியாது அல்லவா? ஆங்கில எழுத்துகளால் தமிழில் எழுதப்பட்டிருக்கிறது என்றுதான் கூற முடியும். எந்த எழுத்துகளால் தமிழில் எழுத வேண்டும் என ஆணையில் கூறவில்லையாதலால் இப்படியும் எழுத ஆணையில் இடம் இருக்கிறது. எனவேதான் "தமிழ் எழுத்துகளால் தமிழில்தான் எழுத வேண்டும்" என ஆணையிட அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

வகையில் குறிப்பிட்டு ஒன்றைக் கூற விரும்புகிறேன். தமிழ்ப்பாடங்களை இக்காலச் சிறந்த உத்திகளான தொலைக்காட்சி, நாடா, திரைப்படம் ஆகியவை மூலம் பதிவு செய்து அனுப்பி வைத்தால் மிகுந்த பயன் விளையும்.

தமிழ்நாட்டு அரசு தனது கல்வி இயக்ககத்தில் ஒரு தொலைக்காட்சிப் பதிவுக்கூடத்தை நிறுவும் திட்டத்தைச் செயல்படுத்தவிருக்கிறது. மேலும் தமிழ்நாடு திரைப்பட, தொலைக்காட்சிப் பயிற்சி நிலையத்தில் (Film and Television Institute of Tamilnadu) அத்தகைய பதிவுக்கூடம் நிறுவப்பட்டு வருகிறது. சென்னைப் பல்கலைக் கழகமும் ஒரு தொலைக்காட்சிப் பதிவுக்கூடம் நிறுவவிருப்பதாகக் கேள்விப்படுகிறோம். இப் பதிவுக்கூடங்கள் மூலம் மேலே குறிப்பிட்ட தமிழ்ப்பாடங்களை ஒளிப்பதிவு நாடாக்களில் பதிவு செய்து, தமிழர் வாழும் நாடுகளுக்கு அனுப்பி வைக்கலாம். மேலும் தமிழ் நாட்டு அரசு தனது திரைப்படப் பிரிவு மூலமாகவும் தமிழ்ப் பண்பாட்டைக் குறித்ததான சிறிய திரைப்படங்களைப் பிடித்து அனுப்ப வேண்டும். தமிழ்நாட்டு அரசின் செய்தி மக்கள் தொடர்பு மற்றும் தமிழ்ப்பண்பாட்டுத்துறை இதற்கு உடன் ஆவன செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். o

www.thamizham.net - Free E book No 7521

இதைப் போன்றே, **போர்ட்டர் ஹால், இந்திய ஸ்டேட் பாங்க், யூனியன்,** என்பனவும், தஞ்சையில் உள்ள **கலெக்டர் பங்களா இராஜா ரெஸ்ட் ஹவுஸ்** போன்றனவும் தமிழில் எழுதியிருப்பதாகச் சொல்ல முடியாது. தமிழ் எழுத்துகளால் ஆங்கில மொழியில் எழுதப் பட்டிருக்கிறது என்றுதான் கூற முடியும். இத் தொடர்கள் ஆங்கிலத்தில் அமைவதற்குக் காரணமாக அமைந்தவை **ஹால், ஹவுஸ், ரெஸ்ட், ஸ்டேட்** என்ற சொற்களே. அத் தொடர்கள் ஆங்கிலமாக உருவெடுப்பதற்கு மிகவும் முகாமையான கருவிகளாக விளங்கியவை ஹ, ஸ, ஜ எனும் எழுத்துகளே. இவ்வெழுத்துகள் மட்டும் இல்லா திருந்தால் அவை உறுதியாக ஆங்கில வடிவில் அமைந்திருக்க இயலாது, இவ்வெழுத்துகளே அவ்வாறு நினைக்கவும் எழுதவும் செய்தன. அதாவது ஹ, ஸ, ஜ எனும் எழுத்துகள்தாம் அவ்வாறு ஆக்கம் செய்ய வைத்தன என்று கூறலாம். இத் தொடர்களை எவரொருவர் ஆக்கம் செய்தாரோ அவரிடத்திலே, **தமிழ் எழுத்துகளால்தாம் எழுத வேண்டும்** என்ற வரம்பை அளித்திருப்போமானால் உறுதியாக அந்த ஆங்கிலச் சொற்களின் சிந்தனை அவர் மூளைக்குக் கடுகளவேனும் எட்டியிருக்க முடியாது. ஹ, ஜ, ஸ என்ற எழுத்துகளே அச் சொற்களை நினைவூட்டச் செய்தன என்பது தெளிவு. எனவே, தமிழ் எழுத்துகளால்தாம் எழுத வேண்டும் என்று குறிப்பிடாவிட்டால் அவ்வெழுத்துகளே பல சொற்களை விழுங்கிப் பின் பல தொடர்களை விழுங்கி இறுதியாக மொழியையே மாறுபட்டதாக்கி விடும்.

வருஷம், பரிக்ஷை, ஸம்ரக்ஷகர், ஷண்முகம், வனஜா, இராஜா என்பவற்றில் **வருஷம்** என்பதில் உள்ள "ஷ" என்ற ஓர் எழுத்தே நம்மை **ஆண்டு** என்னும் நம் சொல்லைச் சிந்திக்க விடாமல் அதனுடைய மொழியின் சொல்லுக்கே நம்மை இழுத்துச் செல்கிறது. இதுபோன்ற க்ஷ, ஸ, ஷ, ஜா, என்பது முறையே **தேர்வு — காப்பாளர் — ஆறுமுகம், தாமரை மலர், அரசன்** எனும் சொற்களை எண்ணவிடாது அவற்றின் மொழியின் சொற்களையே நினைவூட்டுகின்றன. ஓர் எழுத்து அதனுடைய மொழியின் வளர்ச்சிக்கே ஆக்கம் தரும்.

ஒரு மொழி அம் மொழியின் எழுத்துகளாலேயே பிறமொழி எழுத்துகள் கலவாது எழுதப்படுமாயின், மேலும் மேலும் அம் மொழி நுண்ணிய வளர்ச்சியை எளிதாக — இயல்பாகப் பெறும் என்பது திண்ணம்.

ஓர் எழுத்தேயாயினும், ஓர் எழுத்துதானே என எண்ணி விடக் கூடாது. அந்த ஓர் எழுத்தே ஒருவர் தன் மொழியின் சொற்களை நினைக்க விடாமல் அந்த எழுத்தினுடைய மொழிக்கே அவரை அழைத்துச் செல்லும் ஆற்றல் வாய்ந்தது என்பதை நன்கு உணர வேண்டும். இப்படிப்பட்ட ஓரிரண்டு எழுத்துகளும், சொற்களுமே நம் முன்னோர்களின் காலத்தை இருள் மயமாக்கின. அவ்வெழுத்து

www.thamizham.net - Free E book No 7521

களுக்குச் சமயங்கள் துணை நின்றன. அச் சமயங்களுக்கு அவ் வெழுத்துகள் துணை நின்றன.

அ. கோவிந்தராசன் எனும் பெயரை எழுதுகையில் A. கோவிந்தராசன் என்று ஆங்கிலமும் தமிழுமாக எழுதுகின்றனர். இதையே அ. Govindarasan எனத் தமிழும் ஆங்கிலமுமாக எழுதுவதில்லை. ஆங்கிலத்தில் எழுதும்போது மட்டும் A. Govindarasan என்று அதனுடைய மரபைச் சற்றும் நழுவவிடாமல் மிகக் கண்ணும் கருத்துமாகக் காக்கின்றனர். ஆனால் தாய்மொழியாகிய தமிழில்தான் இத்தகைய கொலைகளைச் செய்கின்றனர். மேலும் A என்பது அ, ஆ எனும் ஈரெழுத்துகளையும் சுட்டும். தந்தையின் பெயர் அங்கமுத்தா? அல்லது ஆனைமுத்தா? எப்படித் தெரிந்து கொள்வது? ஏன் இந்த ஆங்கிலக் காதல்? இந்த ஓர் எழுத்துக்காக மட்டும் நான் சொல்லவில்லை. இந்த ஓர் எழுத்து பல எழுத்து களுக்கு இடம் அளித்துவிடும் என்பதுதான்.

தமிழகவரசினால் நடத்தப்படும் பரிசுச் சீட்டில் எல்லாச் சொற்களும் ஆங்காங்கே மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. ஆனால் II, IJ என்பனவும் Commissioner & secretary ஆகியனவுமே மொழி பெயர்க்கப்படவில்லை. இதற்குக் காரணம் "தமிழில்தான் எழுத வேண்டும்" என்ற ஆணையில், தமிழ் எழுத்துகளால் எழுத வேண்டும் என்று குறிப்பிட்டிருப்போமாயின், II, IJ என்ற ஆங்கில எழுத்துக் குறிகளை நினைத்துக்கூட பார்த்திருக்க முடியா — அவை நம் மூளையில் சற்றும் பட்டிருக்கவும் மாட்டா.

ஒரு பெயரைச் சுருக்கும்போதுகூட C.R.C., P.R.C., என்றுதான் சுருக்குகிறார்களே தவிரத் தமிழில் சே. போ. க., ப. போ. க. எனச் சுருக்குவதில்லை. இதனால் விளைவது என்ன? அவற்றைக் கூட்டியுரைக்கையில் ஆங்கில மொழியே விரிவாக்கப்படுகிறது. அப்போது நம் சிந்தனையில் விரிவாக்கப்படுவது, ஆங்கில மொழியே அன்றித் தமிழ் இல்லை. இப்படிச் சுருக்க நிலையில் எல்லா இடங்களிலும் ஆங்கிலமே கோலோச்ச தமிழ் அங்கே தள்ளப்பட்டு, உயிரோட்டம் பறிக்கப்படுகிறது. தமிழில்தான் எழுத வேண்டும் என்ற ஆணையை உடைக்க இந்நிலை ஒன்றே போதுமானதாகும்.

பல்கலைக் கழகம் தரக்கூடிய பட்டங்கள் அனைத்தும் ஆங்கிலத்திலேயே கொடுக்கப்படுகின்றன. அவை ஆங்கிலத்தால்தான் கொடுக்கப்பட வேண்டியனவா? அப் பொருளைத் தரத் தமிழ் வல்லாதா? அல்லது தமிழகம் வழங்கும் பட்டம் தமிழில் இருக்கக் கூடாதா? இதைவிடப் பெரும் துயரம் தமிழ்ப் புலவர் சான்றிதழ் ஆங்கிலத்தில் வழங்கப்படுகிறது. இப்படிப் பிறமொழி எழுத்துகளையும் வழங்க விடுவதால் நம் சிந்தனை அவ் வம்மொழியில் நிலவுவதோடு அவ் வெழுத்துகளும், சொற்களும் அம்மொழியின் வளர்ச்சிக்கு நம்மையே ஆளாக்கிவிடும். நாம் பின்பு தெளிவான சிந்தனையை ஆங்கிலத்திலும் பெறவியலாது; தமிழிலும் பெறவியலாது. பல்லாயிரம்

www.thamizham.net - Free E book No 7521

ஆண்டுகளாக நம் முன்னோர்கள் எந்நிலையில் இருந்தார்களோ, அந் நிலையே நமக்கும் மிஞ்சுவதாகும். முன்னேற்றத்தின் — மூலமே சிந்தனை. அச்சிந்தனையின் இருப்பு தாய்மொழி. மேம்புல் மேய் அறிவு சிந்தனைக்கு இடந்தராது. பிறமொழியறிவும் அதன் கலப்பும் மேம்புல்லே.

அனைத்துத் துறைகளையும் தமிழில் பெயர்க்கத்தமிழகவரசு முனைவது, தமிழகம் பல்லாயிரம் ஆண்டுகளாக இருளில் மூழ்கித் தன்னறிவு வளர்ச்சியை அடகு வைத்துக் காலத்தை வீண் போக்கிய நிலையை மாற்றிக் காலக் கழிவு, பொருளழிவு இல்லாத உயர்ந்த — தூய சிந்தனையையும் நுண்ணிய அறிவுப் பெருக்கையும் பெறச் செய்யும் அரிய — வியப்பான அறிவார்ந்த புரட்சியாகும்.

இப்படிப்பட்ட ஓர் அரிய நிலையில் — பயிரின் முகாமையை நன்கு அறிந்துணர்ந்து அயராது அரும்பாடுபட்டு அப் பயிரை வளர்த்து அதன் அண்டையிலேயே களையையும் தெரிந்தே விட்டு வைப்போமானால், பயிர் பயனளிப்பது எப்படி?

எனவே, "**தமிழில்தான் எழுத வேண்டும்**" என்ற தமிழகவரசின் ஆணை பயனளிக்க வேண்டுமாயின் — தமிழ் ஆட்சி மொழி என்ற பெயர் பொய்க்காது மெய்யாக வேண்டுமாயின் **எழுத்து, சொல், பொருள் அனைத்தும் தமிழாதல் வேண்டும்.** இவற்றில் சொல்லையும், பொருளையும், சாகடிப்பன பிறமொழி எழுத்துகளே. மேலே நான் காட்டிய தவறுகள் நடைமுறையில் காணப்படும் ஆயிரக்கணக்கானவற்றில் ஒரு சிலவே. சான்றுகள் அனைத்தையும் காட்டுவதாயின் கட்டுரை நீளும் என்பதால் தேவையான ஒரு சில சான்றுகளை மட்டும் நிலையறிய எடுத்துக் காட்டியுள்ளேன்.

எந்த மொழி எழுத்தாயினும் அம்மொழியின் சொல்லையும் பொருளையுமே வெளிப்படுத்தும். அதனுடைய மொழிக்கே ஊன்று கோலாக இருக்கும். அப்படியிருக்க "தமிழில் தான் எழுத வேண்டும்" என ஆணையிட்டுவிட்டு ஆட்சி மொழி தமிழென்று சொல்லி விட்டு, நாடெங்கும் பிறமொழி எழுத்துகளையும் சொற்களையும் நிலவச் செய்து பலமொழிகளின் வளர்ச்சிக்கு இடமளிப்பது ஆணையின் பயனை அடைவதாகாது. ஆணை உண்மையில் செயல்படுவதாயின் — செயல்பட வேண்டுமாயின் — பிறமொழி எழுத்துகளுக்கும் சொற்களுக்கும் இடம் அளிக்காமல், தமிழ் எழுத்துகளால் சொற்களால்தாம் எழுதவேண்டும் என்று வெறும் சொல் நிலையில் இல்லாது **ஆணையிட்டுச் செயல்படுவதே** நம் நோக்கம் நிறைவேற நேரிய வழியாகும். அண்ணா அவர்களின் அன்புள்ளம் எண்ணியாங்குச் செயல்படுவதாகும் எனக் கூறி உடன் தக்க நடவடிக்கை எடுக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

(பி. கு: குடந்தைப் புலவர் திரு. அ. **கோவிந்தராசன்** அவர்கள் இவ் வேண்டுகோளை அரசுக்கு அனுப்பி வைத்துள்ளார். அதன் படி இது.)

www.thamizham.net - Free E book No 7521

'திட்டக் குழுவின்' மூலம் தீவிர இந்தித் திணிப்பு!

(சிந்தனைச் செம்மல் கு. ச. **ஆனந்தன்**, வழக்குரைஞர், கோபி)

இந்தியத் துணைக் கண்டம் முழுவதையும் இந்தி மயமாக்கும் நடுவண் அரசின் செயல்முறைகளில், புதியதொரு வரலாற்றுத் திருப்பத்தை அண்மையில் **"திட்டக்குழு"** உருவாக்கியுள்ளது. "ஆட்சி மொழி என்ற தகுதியில், இந்தியை விரிவாக வளரச் செய்யவும் பெரிதும் பயன்படுத்தவும் முனைப்புடன் பரப்பவும்" திட்டக்குழு உறுதிபூண்டு, அவற்றைத் தனது **"திட்டப் பொருளாக"** (Planning subject) ஏற்றுக்கொண்டு விட்டது. ஆரவாரமின்றி, அடக்கமாக நடுவண் அரசின் அறிவுரையுடனும் தூண்டுதலுடனும்தான் இம் முடிவு மேற்கொள்ளப் பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகப் புலனாகும்.

இந்தி, திட்டப் பொருள் – விளைவுகள்.

ஒரு **பொருள்** (Subject) **'திட்டப் பொருளாக'** ஏற்றுக் கொள்ளப்பட்டால், அப் பொருள் சார்ந்த அனைத்துத் திட்டங்களையும் தீட்டி அவற்றைச் செயற்படுத்தும் உரிமைகளைத் திட்டக் குழு பெற்றுக்கொள்கிறது; கோடிக்கணக்கான உருபாக்களைச் செல விட்டு அத் திட்டங்களை நடுவண் அரசின் அமைப்புகளின் மூலமாகவும் நடுவண் அமைச்சகங்களின் வாயிலாகவும் திட்டப்படி நல் முறைப் படுத்துகின்ற ஆளுமையையும் பெற்று விடுகிறது.

ஆட்சி மொழி (Official language) என்ற தனித் தகுதியோடு 'இந்தி' 'திட்டப் பொருளாக' ஆக்கப்பட்டு விட்டது என்றாலே, **குறிப்பிட்ட கால வரையறைக்குள், அனைத்து மாநிலங்களிலும்** (இந்தி பேசாத மாநிலங்கள் உள்பட) **அவை விரும்பியோ விரும்பா மலோ - திட்டமிட்ட வகையில், இந்தி முனைப்போடு பரப்பப் பட்டு விடும்; சட்டக் காப்புடன் 'இந்தித் திணிப்பு' மறைமுக நிலையில் இயக்கப்பட்டு விடும் என்பதும்தான் பொருள்.**

இந்தித் தொடர்பான பல்வேறு தீவிரத் திட்டங்களையும் (Plans) வகை துறை ஏற்பாடுகளையும் (Schemes) திட்டக் குழுவின் வலிமையுடன், நடுவண் அரசின் ஆட்சி மொழித் துறை இனி வெளிப் படையாகவே செயற்படுத்தும். அதற்குத் திட்டக் குழுவின் **"இந்தித் திட்டப் பொருள் முடிவு"** முதன் முறையாக வழிவகை செய்கிறது. நாடு தழுவிய இந்தி அறிஞர்கள் மற்றும் வல்லுநர்களின் கருத்துகளையும், திட்டங்களையும், நடுவண்-மாநில அரசுத் துறைகள் மற்றும் அறிவுரைக் குழுக்களின் பரிந்துரைகளையும்; திட்டக்குழு வலிந்து பெற்று, அவற்றை ஆய்வு செய்து, தனது **திட்ட இயந்திரத்தின்"** (Planning machinary) மூலம் முடிவான இந்தித் திட்டங்களாக ஆக்கியமைத்து, ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமாகவும் வேறு நிறுவனங்கள் வழியாகவும் விரைவாகச் செயற்படுத்த இனி முனையும்.

www.thamizham.net - Free E book No 7521

அண்மைக் காலம் வரை மாநில அதிகாரப் பட்டியலில் இருந்த **"கல்வி"** அரசியற் சட்டத் திருத்தத்தால், இப்போது நடுவண்-மாநில அரசுகள் பொதுவாகச் சட்டமியற்றத் தக்க **"பொதுப் பட்டியலில்"** (Concurrent list) இடம் பெற்று விட்டது. இந்த மாநில அதிகாரத்தைப் பயன்படுத்தித்தான் **பேரறிஞர் அண்ணா** அவர்கள் தமிழகப் பள்ளிகளிலிருந்தும், பாடத்திட்டத்திலிருந்தும் இந்தியை அகற்றிவிட்டார். ஆனால் இன்றைய நிலை வேறு. 'கல்வி பற்றிய அனைத்துத் திட்டங்களையும், மாநில அரசுகளின் சட்டங்கள் மூலமாக நிறைவேற்றிக் கொள்ளும் பழைய நிலை மாறிவிட்டது. **'கல்வியை'** இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் சீர்மையோடு செயற்படுத்துவதற்கு, நடுவண் அரசு தன் அடிப்படைக் கோட்பாடுகளையும் நடைமுறைத் திட்டங்களையும் வகுக்கத் தனிச் சட்டங்களையும் ஆணைகளையும் இயற்றக் கூடிய அதிகாரத்தை இப்போது பெற்றுக் கொண்டுள்ளது. நடுவண் அரசு அவ்வகைச் சட்டங்களைச் செய்தால், அவற்றிற்குப் புறம்பான மாநிலச் சட்டங்களும், நெறிமுறைகளும் ஆணைகளும் தாமாகவே செல்லாமற் போகும். **தமிழக அரசின் இருமொழிக் கொள்கையும் நடுவண் அரசு புதிய சட்டம் இயற்றும் வரைதான் உயிர்ப்போடு இயங்கும். பின்னர் தானாகவே மடிந்து விடும்.**

திட்டக்குழு தரும் இந்தித் திட்டங்களை முறையோடு செயற்படுத்தத் தேவையான சட்டங்களையும் நெறிமுறைகளையும், ஆணைகளையும் 'கல்வி' என்ற தலைப்பின் கீழ் நடுவண் அரசு இனிச் செய்யும். அத்திட்டங்களை மாநிலங்கள் தாமாகவே ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் பொருளேந்துகள், விருப்ப மானியங்கள் (Discretionary grants) உதவி மானியங்கள், கடன்கள் போன்றவற்றைத் தந்து திட்டக்குழு தரும் கொள்கைகளுக்கேற்றபடி மாநில அரசுகளைச் சுற்றி நடுவண் அரசு கட்டாயச் சூழலை அமைத்து விடும்.

மாநிலங்களின் குமுகாய வளர்ச்சித் திட்டங்களுக்குரிய (Social services) அடிப்படைக் கொள்கைகளும், செயல் முறைகளும் திட்டக் குழுவால் வரையறுக்கப் படுகின்றன. அவற்றைத் தழுவியே மாநில அரசுகள், தம் குமுகாய வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்ற வேண்டும். அவற்றில் **"ஆட்சி மொழியான இந்தியும்"** இனி இடம் பெற்று விடுமன்றோ?

மாநில அரசுகளின் தனித்த அதிகாரங்களில்கூட, நடுவண் அரசு திட்டக்குழு மூலமாகத் தலையிடுகிறது. மாநில திட்டங்களைச் (State plans) செயற்படுத்தும் போது நடுவண் அரசு மாநில அரசுகளின் ஆளுமைக் கொள்கைகளில் மறைமுகமாகத் தலை இடுவதுடன் பல வகையான கட்டுப்பாடுகளையும், நெறிமுறைக் கோட்பாடுகளையும் (Directives) அவற்றின் மேல் சுமத்துகிறது. அதற்குக் காரணம் 'பொருள்'. அப் பொருளைப் பலவகைகளிலும்,

www.thamizham.net - Free E book No 7521

மாநிலங்களுக்கு அளிக்க வழிப்படுத்துவது திட்டக்குழு. மாநில அரசுகளின் ஆளுமைக் கொள்கைகளில் ஊடுருவல்களைச் செய்தும் பொருளழுத்தங்களைத் தந்தும், நடுவண் அரசு திட்டக்குழு உருவாக்கும் இந்தித்திட்டங்களை மாநிலங்கள் ஏற்றுக் கொள்ளவைத்துவிடும்.

"பல்கலைக் கழக நல்கைக் குழு" (University grants commission) மூலமாகவும் இந்தி பேசா மாநிலங்களில் இயங்கும் பல்கலைக் கழகங்களின் மேல், திட்டக் குழுவின் இந்தித் திட்டங்கள் இனி வலிந்து திணிக்கப்படும்.

ஆறுவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்கு முன்பே, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வரைவுத் திட்டத்தை (Draft plan) உருவாக்கி முடிவெடுத்துவிட வேண்டுமென நடுவண் அமைச்சரவை அண்மையில் தீர்மானித்துள்ளது. அஃதாவது 1983 மேத் திங்கள் இறுதிக்குள் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வரைவுத்திட்டம் அமைக்கப்பட்டு விடும். அதில் இந்தி பற்றிய பல்வேறு திட்டங்களும் இணைக்கப்படும். அதற்குரிய இயைபான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காகவே திட்டக்குழு இந்தியைத் திட்டப் பொருளாக முன் கூட்டியே ஆக்கியுள்ளது.

நடுவண்-மாநிலப் பொருளியல் உறவுகளை அரசமைப்பு (Constitution) வரையறை செய்துள்ளது. ஆறுல் அரசமைப்பில் குறிப்பிடப்படாத புதிய நடுவண்-மாநிலப் பொருளியல் உறவுகளை நடுவண் அரசு சென்ற 30 ஆண்டுக் காலமாகத் திட்டக் குழு மூலம் உருவாக்கி நடைமுறைப்படுத்தி வருகிறது. அவை அரசமைப்புக்கு அப்பாற்பட்டவையாக இருப்பினும் "பொருள்-உதவி" என்ற நெம்பு கோல் (Lever) காரணமாக மாநிலங்கள் தாமே வலிந்து அவற்றை ஏற்றுக்கொண்டு விட்டன. அதற்காக அரசமைப்புச் சட்டத்தின் எஞ்சிய நெறியாகவிருக்கும் 282-ஆம் நெறியைத் திரிபுபடுத்தியும் சிதைத்தும் பொருள் கொண்டு நடுவண் அரசு விருப்ப மானியங்களையும் (Discretionary grants) திட்டப்பொருள் வாய்ப்புகளையும் மாநிலங்களுக்குத் தந்து, மாநில அரசுகளைத் தன் மேலாண்மைக்கு அடிபணிய வைத்துவிட்டது.

திட்டங்களுக்கான பொருள் ஏந்துகள், மற்றும் செயல்முறை பற்றிய திட்டக் குழுவின் பரிந்துரைகளை நடுவண் அரசின் அமைச்சகங்கள் அப்படியே ஏற்றுக்கொண்டு செயல்படுகின்றன. பொருள் ஆணைக்குழு (Finance commission) மூலம் அரசியற் சட்டப்படி மாநிலங்களுக்குத் தரப்படும் "உதவி மானியத்தொகை" (Grants in Aid)போல ஏறத்தாழ இரண்டரை மடங்கு அதிகத் தொகையைத் திட்டச் செலவுகளுக்காக விருப்ப மானியங்கள் என்ற பெயரால் சட்ட முறையைக் கடந்து நடுவண் அரசு மாநிலங்களுக்குத் தருகிறது. நடுவண் அரசு விரிக்கும் அப் பட்டுவலையினுள் மாநில அரசுகள் வீழ்ந்து விடுகின்றன.

www.thamizham.net - Free E book No 7521

திட்டக்குழு தரும் ஆட்சி மொழித்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்காகவும் இவ்வகையான மறைமுக வழிகளை நடுவண் அரசு தொடர்ந்து கடைப்பிடிக்கும் இந்தி பேசா மாநிலங்கள் கூடத் தாமே விரும்பிச் சில இந்தித் திட்டங்களை ஏற்றுக் கொள்ளக் கூடிய அவல நிலை ஏற்படும். இக்கட்டான சில அரசியல் மற்றும் பொருள் நெருக்கடிகளையும் அதற்கேற்றபடி நடுவண் அரசு உருவாக்கி விடும்.

ஒருபுறம் பொருள் கவர்ச்சி; மறுபுறம் பொருளியல் தளர்ச்சி. இரண்டினிடையே அரசியல், பொருளியலழுத்தங்கள். இக் கையறு நிலையில் இந்தி பேசா மாநிலங்கள் தம் இந்தி மறுப்புக் கொள்கையில் உறுதியின்றி ஊசலாடும். அந்தச் சூழலைப் பயன் படுத்தி இந்தி மொழித் திட்டங்களை அரசியற் சட்டத்திற்கு முரணின்றி, நடுவண் அரசு மாநிலங்களின் மேல் திணித்து விடும்.

ஏறத்தாழ ஏழாவது மற்றும் எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவுக்குள் நடுவண் அரசின் “இந்தி மயமாக்கும்” குறிக்கோள் பல கோடி உருபா செலவில் திட்டக்குழுவின் வலுவான துணையுடன் வெற்றியாக நிறைவேற்றப்பட்டு விடும்.

இத்துணை எதிர்கால அவல நிலைகளுக்கும் காரணம் திட்டக் குழு இந்தியைத் தன் திட்டப் பொருளாக ஏற்றுக்கொண்டது தான் என்க.

தாழ்ந்த தமிழகமே!

அந்நிலையில் கூட “இந்தி பேசா மாநிலங்கள் விரும்பும் வரை இந்தியுடன் ஆங்கிலமும் துணை மொழியாக இருக்கும்” என்ற நேருவின் திசை திரும்பிய உறுதிமொழி, சொல்லளவில் இருக்கும். ‘இந்தியைத் திணிக்க மாட்டோம்’என்ற நடுவண் அரசின் நிலையான உறுதிமொழிகளும் அவ்வப்போது தரப்பட்டுக் கொண்டேயிருக்கும்!! “தமிழ்மகன் ஒருவன் உயிரோடு இருக்கும்வரை தமிழகத்தில் இந்தியை நுழைய விடமாட்டோம்” என்ற திராவிட இயக்கங்களின் வீர முழக்கங்களும் (சென்ற 17 ஆண்டுகளைப் போலவே இனியும்) தொடர்ந்து தமிழகத்தில் ஒலித்துக் கொண்டிருக்கும்!!! ஆனால் பாய்ந்து வரும் இந்தி எரிமலைக் குழம்பை—திட்டமிட்ட ஆட்சி மொழியின் அழுத்தத்தை—யாராலும் தடுத்து நிறுத்திவிடமுடியாது. காலங் கடந்த விழிப்புணர்ச்சியால் தமிழகத்தைச் சுற்றிப் பற்றி எரியும் இந்திப் பெரு நெருப்பை யாரும் அணைத்து விடவும் முடியாது; அதிலிருந்து தமிழகமும் மீளவும் முடியாது. மிகப் பெரிய ஈகங்களினாலுங்கூடப் பின்னால் இந்திச் சிக்கலைத் தீர்த்து விட முடியாது.

இந்தி எதிர்ப்பை உயிர் மூச்சாகக் கொண்டு இயங்கி வரும் திராவிட இயக்கங்கள் இனியாவது தமது மாய மாலங்களை அகற்றிக் கொண்டு மெய்ம்மை நிலையுணர்ந்து விழித்தெழுந்து அனைத்துப் புலங்களிலும் ஒரே கருத்துடன் இந்தித் திணிப்பை எதிர்த்துச் செயல்பட

www.thamizham.net - Free E book No 7521

வேண்டும். அதற்கு முன்னோடியாகத் தமிழக மக்களுடைய இன்றைய அவல நிலையை அவர்களுக்குத் தெளிவாக உணர்த்த வேண்டும்.

இவற்றிற்கு அணியமாக நாம் இல்லையெனில், இந்தியை ஆட்சி மொழியாக இன்றே ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. நடுவணரசின் உறுதி மொழிகளைத் தமிழக மக்களுக்குக் காட்டியும் மொழி, இன, பண்பாட்டு உணர்ச்சியை அவர்களுக்கு ஊட்டியும், இறுதியில் அடுத்த ஒரு தலைமுறையையும் வளர்ச்சியின்றிப் பாழடித்து 'இந்தி இல்லை' என நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதில் எவ்வகைப் பயனுமில்லை.

இன்னும் சில ஆண்டுகளில், இந்தி பேசும் மாநிலங்கள் அனைத்துத் துறையிலும் வளர்ந்தோங்கி முதன்மை நிலையைப் பெற்றுவிடும். தமிழகம் எல்லாத் துறைகளிலும் பின் தங்கித் தாழ்ந்து விடும்.

அரசியற் சட்டத்தின் 351-ஆம் பிரிவு, ஆட்சி மொழி 'இந்தி' பற்றிய நடுவண் அரசின் இறுதிநிலைக் குறிக்கோளையும் செயல் முறைகளையும் தெளிவாகக் கூறுகிறது.

"இந்தி மொழியைப் பரப்பி மேம்பாடு அடையச் செய்தலும் இந்தியக் கூட்டுப் பண்பாட்டின் அனைத்துக் கூறுகளுக்கும் சொல்லமைப்புக் கருவியாகும் வகையில் இந்தியை வளர்த்தலும்.... .... இந்தியைச் செழித்தோங்கச் செய்தலும், நடுவண் அரசின் நீங்காக் கடமையாகும்" என அச் சட்டப்பிரிவு நடுவண் அரசுக்குக் கட்டளையிடுகிறது. அதற்கெதிராகச் செய்யப்படும் எந்த ஒரு சட்டமும் அரசு ஆணையும் செல்லாமற் போய்விடும். இந்தியத் தலைமை அற மன்றம் பல வழக்குகளில் இத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

நடுவண் அரசின் மேல் அரசமைப்பால் இயற்றப்பட்டிருக்கும் இந்தியைப் பரப்பும் (திணிக்கும்) கட்டாயக் கட்டளையைத் தமிழகம் உட்பட மற்ற இந்தி பேசா மாநிலங்கள் குறுக்கு வழிகளில் மறுத்து ஒதுக்கி விடமுடியாது. நடுவண் அரசின் அந்த நீங்காக் கடைமைக்குப் புதிய செயற்பாட்டு வடிவம் கொடுப்பதுதான், திட்டக்குழுவினால் இந்தித் திட்டப் பொருளாக ஏற்றுக்கொள்ளப் பட்டமையாகும் என நடுவண் அரசு, சட்ட முறைப்படி வழக்காடினாலும் வியப்படைவதற்கில்லை.

ஆக அரசியற் சட்டத்தின் 351-ஆம் பிரிவு திருத்தப்படாத வரை, அல்லது அடியோடு நீக்கப்படாதவரை, அல்லது இந்திக்கு அரசமைப்பால் தரப்பட்ட ஆட்சி மொழித் தகுதி அகற்றப்படும் வரை நேருவின் உறுதிமொழியைத் திரிபுபடுத்தி இயற்றப்பட்ட "ஆட்சி மொழிகளின் சட்டமோ" (Official Languages Act-1963) தலைமையமைச்சர்களின் உறுதிமொழிகளோ எவ்வகையான பயனையும் நடைமுறையில் தாரா.

www.thamizham.net - Free E book No 7521

'முன்னுறக் காக்க......"

இடைக் காலத்தில், இந்தித் திணிப்பு எதிர்ப்பைத் தமிழக மக்கள் வலிவுடன் வலியுறுத்துவதற்காகச் சட்டங்கள் மரபுநிலை மற்றும் நடுவு நிலைப் பொதுக் கருத்துகளின் அடிப்படையில் நம் எண்ணங்கள் சிலவற்றை இங்குத் தந்துள்ளோம்.

1. குமுகாய, பொருளியல் திட்டமிடுதலே (Social economic planning) திட்டக் குழுவின் மூல நோக்கமும் பணியும் ஆகும். 15-3-1950-இல் நிறைவேற்றப்பட்ட நடுவண் அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலமாகவே திட்டக் குழு உருவாயிற்று. அதன் பணிகளும் நோக்கங்களும் அதில் தெளிவாகத் தரப்பட்டுள்ளன. அவற்றின் சாரமாவது:- நாட்டினுடைய அடிப்படை வளப் பொருள்கள், மூலப்பொருள், மாந்த ஆற்றல், வல்லுநர்கள், தொழில் நுணுக்க ஆற்றல்கள் போன்றவற்றைக் கணக்கெடுத்து நாட்டின் தேவைகளுக் கேற்ப அவற்றை மேலும் பெருக்கக் கூடிய வழி வகைகளைப் பற்றி ஆராய்தல்; நாட்டினுடைய அடிப்படை வளங்களைத் (Resources) தக்க முறையில் பயன்படுத்தித் திட்டங்களைத் தீட்டுதல்; திட்டங்களின் வரிசை முறையையும் (Priority) செயற்படுத்தும் மட்டங்களையும் (Stages) தீர்மானித்தலும் அவற்றிற்குரிய வகையில் பொதுவாய்ப்புகளைப் பிரித்தொதுக்குதலும்; நாட்டின் பொருளியல் வளர்ச்சியைத் தடுக்கக் கூடிய சிறப்புக் கூறுகளைச் சுட்டிக் காட்டுதல்; அவ்வப்போது எழும் அரசியல் மற்றும் குமுகாயச் சூழ்நிலைகளை ஒட்டித் திட்டங்களை வெற்றியாக நிறைவேற்றுவதற்கான நிலைமைகளைத் தீர்மானித்தல்; "**திட்ட இயந்திரத்தின்**" (Planning machinary) தன்மையை அவ்வப்போது தீர்மானித்தல்; திட்டக் கொள்கை, பொருள் மற்ற வழிமுறைகள் போன்றவற்றை நடுவண் அரசுக்குப் பரிந்துரைத்தல்; நாட்டின் பொருளியல் வளர்ச்சியை அவ்வப்போது தெளிவாக்குதல்; நாட்டில் இருக்கக் கூடிய பொருளியல் சூழ்நிலை, நடப்புக் கொள்கைகள், வழிமுறைகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அவற்றிக்குத் தேவையான பரிந்துரைகளை நடுவண் அரசுக்கு வழங்குதல்; **திட்டக் குழுவிற்குத் தரப்பட்டுள்ள கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றக்கூடிய வகையில் நடுவண் அரசாலும் மாநில அரசுகளாலும் தரப்படும்.** குறிப்பான சில சிக்கல்களை ஆராய்ந்து அவற்றிற்குரிய அணைத்துப் பரிந்துரைகளையும் செய்தல்.

இவைதாம் திட்டக் குழுவின் தொடக்கக் காலப் பணிகளாக இருந்தன. ஆனால் ஐந்தாண்டுத் திட்டங்கள் வளரவளர தனது பணித் எல்லையைத் திட்டக்குழு விரிவாக்கிக்கொண்டே வந்துள்ளது. சென்ற 30 ஆண்டுகளில், இந்தியத் துணைக் கண்டத்தின், "**பொருளியல் உயர்மட்ட அமைச்சரவை**" (Super Economic Cabinet) என்று கூறப்படும் அளவிற்கு வலிமை வாய்ந்த ஓர் அமைப்பாகத் திட்டக்

www.thamizham.net - Free E book No 7521

குழு வளர்ந்து விட்டது. என்பது உண்மைதான் என்றாலும் **ஆட்சி மொழியைப் பரப்பும் உயர்மட்ட அமைப்பாக"** அது மாறவில்லை.

2. சனதா கட்சி, அரசுக் கட்டிலில் அமர்ந்த பின்னர்த் திட்டக் குழுவின் நடைமுறைகளிலும் அமைப்புகளிலும் செயல்முறைகளிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. என்றாலும்கூடத் திட்டக்குழு, இந்திப் பரப்பீட்டையும், வளர்ச்சியையும் தனது திட்டப்பொருளாக ஆக்கிக் கொள்ளவில்லை. இந்தியைக் குமுகாய, பொருளியல் திட்டமிடுதலின் ஒரு கூறாகவும் ஏற்கவில்லை.

3. இந்தியப் பொருளியல் வளர்ச்சியையும் நடுவண் - மாநில மாற்று உறவுகளையும், மாநில அரசுகளின் தனித்த பல அதிகாரங்களில் நடுவண் அரசின் ஊடுருவல்களை, விளைவித்த திட்டக்குழு நடுவண் அரசையும், மாநில அரசுகளையும் ஆட்டிப் படைத்து வருவது உண்மைதான். ஆட்சிக் கட்சியின் அனைத்துப் பொருளியல் மற்றும் குமுகாயக் கொள்கைகளையும் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ, அமைப்பு முறையில் நிறைவேற்றுவதற்கு உறுதுணையாக இருந்து வருவதும் திட்டக்குழுதான். இருந்தாலும் இன்று வரை சட்டமுறையிலும் நடைமுறையிலும் திட்டக்குழு நடுவண் அரசின் ஓர் உறுப்பாகவோ அல்லது அதன் துணை நிறுவனமாகவோ கருதப்படவில்லை. மாநிலங்களுக்கும், நடுவண் அரசுக்கும்பொதுவான பொருளியல் மற்றும் குமுகாய வளர்ச்சியைத் திட்டமிட்டு நிறைவேற்றும் செயல் நிறுவனமாகவே அஃது இன்னும் இயங்கி வருகிறது.

திட்டக்குழுவின் திட்டங்கள், மாநிலங்களை எதிரொலிக்கும் **'தேசிய வளர்ச்சி மன்றம்'** (National Development Council) ஆய்ந்து முடிவெடுத்த பின்னரே செயலாக்கப்படுகின்றன.

எனவே நடுவண் அரசு, ஆட்சி மொழி பற்றிய அரசமைப்புகளைக் கூறும் இருவகைச் செயற்பாட்டுக் கொள்கைகளைக் கடைப்பிடிக்காமல், திட்டக்குழுவை ஒருதலையாக இந்தி வளர்ச்சிக்காகப் பயன்படுத்தும் கருவியாக ஆக்குவது சட்டப்படி முறையற்றது.

4. குமுகாய, பொருளாதாரத் திட்டமிடுதலின், எவ்வகை விரிந்த விளக்கத்திலும் "ஆட்சி மொழி (இந்தி)" அடங்குவதில்லை. எனவே திட்டக்குழுவின் குறிக்கோள்களுக்கும் நடைமுறைகளுக்கும் மாறாகவும், மாநிலங்களுக்கு எதிராகவும் இந்தியைத் திட்டப்பொருளாக ஆக்குவது முறையற்ற செயலாகும்.

5. ஒரே ஒரு மாநிலம் இழப்புக்கு உட்பட்டாலும்கூடத் திட்டக்குழுவின் குறிக்கோள் வரையறையைத் தன் விருப்பாக நடுவண் அரசு தனக்குச் சார்பாக மாற்றியமைக்க முடியாது. அது கூட்டாட்சிக் கொள்கைக்கு (Fedaralism) முரணானதாகும்.

www.thamizham.net - Free E book No 7521

6. சென்ற 30 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட ஆறு ஐந்தாண்டுத் திட்டங்களிலும்கூட, "ஆட்சி மொழி (இந்தி) திட்டப் பொருளாக" ஏற்கப்படவில்லை. இனி ஏற்கப்பட வேண்டுமெனில், குறைந்த அளவு தேசியவளர்ச்சிமன்றத்தின் ஒரு முகமான தீர்மானம் தேவை. அரசியற் சட்டப்படியான ஒப்புதலும் தேவை. இவை இரண்டும் இல்லா நிலையில் திட்டக்குழு ஆட்சி மொழித் திட்ட வளர்ச்சியை ஏற்க முடியாது.

7. ஐந்தாண்டுத் திட்டங்களை உருவாக்கி நடைமுறைப் படுத்தும் பணிகளில், நமது திட்டக்குழு பெரும்பாலும் சப்பான் (Japan) உருசியா (Russia) போன்ற நாடுகளின் கொள்கைகளைப் பொதுவாகப் பின்பற்றுகிறது. திட்டமிடுதல் தொடர்பாக அந்நாடுகள் கடைப்பிடிக்கும் பொதுவான அடிப்படைக் கோட்பாடுகளையும், ஏற்றுக் கொண்டே நமது திட்டக்குழு செயல்பட்டு வருகிறது. அந் நாடுகளேகூட "ஆட்சி மொழியைத் திட்டக்குழுவின் திட்டப் பொருளாக" ஆக்கவில்லை.

8. திட்டக்குழு முறையான அரசமைப்புச் சட்டத்தால் உருவானதல்ல. எந்த ஓர் அமைப்பும் நடுவண் - மாநில அரசுகளின் பொதுநிறுவனமாக அமைக்கப்படும்போது, அரசமைப்பு முறைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும். அல்லது நாடாளுமன்ற சட்டத்தின் மூலமாகவோ, மாநிலங்களின் சட்டப்பேரவைகளால் இயற்றப் பட்ட ஒரே வகைச் சட்டங்களின் மூலமாகவோதான் அமைக்கப்பட வேண்டும். ஆனால் 'இந்தியத் திட்டக்குழு" நடுவண் அமைச்சரவையின் ஒரு தீர்மானத்தின் அடிப்படையிலேயே பிறந்து வளர்ந்து, செயல்பட்டு வருகிறது. இதுநாள்வரை சட்டப்படி நிலைபெறாத அதன் தன்மையையும், அமைப்பையும் நடைமுறையையும் எந்த மாநிலமும் முறைப்படி தட்டிக் கேட்கவில்லை. நடுவண் அரசு விரும்பியவற்றையெல்லாம் திட்டக்குழு ஏற்றுக் கொண்டு செயல்பட முடியாது. குறிப்பாக ஆட்சி மொழி பற்றிய அரசமைப்புக் கூறுகளுக்கும், ஆழ்கருத்துக்கும் நேருவின் உறுதிமொழிக்கும், "ஆட்சி மொழிகள் சட்டத்திற்கும்" புறம்பாக இயங்கி, இந்தி பேசா மாநிலங்களின்மேல் முறையின்றி இந்தியைத் திணித்திடுமாயின், அந்த அமைப்பின் சட்டப்புறம்பான தன்மையை வெளிப்படுத்திச் சரியான தீர்வு பெறுவதில் தவறு ஏதும் இல்லை.

9. அரசியற் சட்டத்தின் VII ஆம் இணைப்பில் (VII Schedule) நடுவண்- மாநிலப் **"பொது அதிகாரப் பட்டியலில்"** (Concurrent List) 20-ஆம் அதிகாரப் பதிவில் "குமுகாய, பொருளியல் திட்டமிடுதல்" (Social and Economic Planning) என்ற நடுவண் - மாநிலப் பொது அதிகாரத்தை வைத்தே, திட்டக்குழு உருவாயிற்று என்கின்றனர் இன்னொருசாரர். ஆனால் அதற்குரிய சட்ட வரைமுறையை மாநில அரசுகளோ, நடுவண் அரசோ இது

www.thamizham.net - Free E book No 7521

வரையும் செய்யவில்லை. அரசமைப்பின் நடுவண் - மாநிலப்பட்டியல் கூறுகிற, "குமுகாய-பொருளாதாரத் திட்டமிடுதலில்" ஆட்சிமொழி அடங்காது. அந்நிலையில் சட்ட மூலம் இல்லாத திட்டக்குழு இந்தியைத் திட்டப் பொருளாக ஏற்க முடியாது. அஃது அரசமைப்பு நெறிக்கு முரணானதாகும்.

10. "1963- ஆம் ஆண்டின் ஆட்சி மொழிகள் சட்டம்' (Official Language Act) நேருவின் உறுதிமொழிப்படி ஆங்கிலத்தை இந்தியுடன் சமதகுதி கொண்ட கூடுதல் இணைமொழியாகவும் (Associate Additional Language) மாற்று இணைமொழியாகவும் (Alternate Language) ஆகியுள்ளது என இதுவரையும் தலைமை அமைச்சர்கள் உறுதிப்படுத்தி வந்துள்ளனர்; அவ்வுறுதிகளின் அடிப்படையில் தமிழகத்தில் இந்தித் திணிப்பு இருக்காது எனவும் தொடர்ந்து உறுதி கூறிய முகத்தான் ஆங்கிலத்தையும் கூடுதல் ஆட்சி மொழி (Additional Official Language) யாக ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்நிலையில் இந்தி மட்டும் ஆட்சி மொழித் தகுதியோடு வளர்ச்சி பெறுவதற்கும்; பரப்பப்படுவதற்கும் திட்டப்பொருளாக அமைக்கப்பட்டிருப்பதும் இந்தி பேசா மாநிலங்களின் அதிகார வரம்புகளையும் உரிமைகளையும் நடுவண் அரசின் அடிப்படைக் கோட்பாடுகளையும் மீறிய செயலாகும்.

11. 'பொருளாதார சமுதாயத் திட்டமிடுதலில் "மொழியும் ஒரு கூறாகக் கருதப்படுமாயின் 15 தேசிய மொழிகளையும் திட்டக்குழு ஒரே தகுதியுடன் நோக்குதல் வேண்டும். அதற்குரியபடி இந்திய தேசிய மொழிகள் (National Languages) பதினைந்தையும் திட்டப் பொருளாக ஆக்க வேண்டும்.

12. அரசியற் சட்டத்தின் IV ஆம் பகுதியில் நடுவண், மாநில அரசுகள் முறையாகக் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைக் கோட்பாடுகள் (Directive Principles of state policy) தரப்பட்டுள்ளன. அவற்றில்கூடப் பொருளாதாரத் திட்டமிடுதலின் ஒரு கூறாக ஆட்சி மொழி வளர்ச்சி, பரப்பீடு, ஆளுமை போன்றவை இடம் பெறுவதில்லை. அப்படியிருக்கத் திட்டக்குழுவுக்கு இந்திப் பொருள் ஏன்?

13. அரசமைப்பின் XVII-ஆம் பகுதியான "ஆட்சி மொழிப்' பகுதியில் ஆட்சி மொழி வளர்ச்சி மற்றும் பரப்பீடு பற்றிய நேரடி அதிகாரங்கள் நடுவண் அரசைத் தவிர வேறு எந்த அமைப்புக்கும் வழங்கப்படவில்லை. நடுவண் அரசுக்கு மட்டும் 351-ஆம் பிரிவின் மூலமாக அக் கடமை தரப்பட்டுள்ளது. அதில் வேறு வழிவகைகளும் கூறப்பட்டுள்ளன. இந்நிலையில் திட்டக்குழு நடுவண் அரசின் பணியை நேரடியாக ஏற்று இயங்க முடியுமா? நடுவண் அரசு வேறு; நடுவண் - மாநில அரசுகளுக்குப் பொதுவான திட்டக்குழு வேறு. நடுவணரசு பல வரையறைகளுக்கு உட்பட்டுக் குறிப்பாக அரசியற் சட்டங்களுக்கும், ஆட்சி மொழிகள் சட்டத்திற்கும் உட்பட்டு-

www.thamizham.net - Free E book No 7521

தனது ஆளுமை இயந்திரத்தின் மூலமாக மட்டுமே இந்தி வளர்ச்சி மற்றும் பரப்பீட்டைச் செய்ய வேண்டும்; திட்டக் குழுவை அந் நோக்கங்களுக்குரிய செயற்கருவியாக ஆக்குவது அரசமைப்புச் சட்டங்களுக்கு அப்பாற்பட்டது.

14. இத்தனையாண்டுகள் நடைபெற்ற "**தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டங்களில்**" இந்தியைத் திட்டப் பொருளாக ஏற்றுக் கொள்வது பற்றிய முடிவு எடுக்கப்படவில்லை. ஆறுவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்ட போதும், அதன் நிறைவேற்றம் ஆய்வு செய்யப்பட்ட போதும் இந்தியைத் திட்டப் பொருளாக ஆக்குவதுபற்றி எங்கும் ஆய்வு செய்யப் படவில்லை. பல முதலமைச்சர்கள் மாநாடுகளிலும், அம் முடிவு பற்றிப் பேசப் படவில்லை. எனவே இந்தி திட்டப் பொருளாக ஆவது, குடியரசு மரபுப்படியும் கூட்டாட்சி முறைப்படியும் செல்லத் தக்கதன்று.

அரசியற் சட்டத்துக்கு அப்பாலும் சென்று நடுவண் அரசு மாநில அதிகாரங்களில் பொருள் மற்றும் ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலமாக ஊடுருவல் செய்து மாநில அரசுகளை முடக்கி, அடிமை கொண்டு, இப்போது ஒரு "**முற்றுளுமை அரசாக**" மாறிவிட்டதற்குத் திட்டக் குழுவே முதற் காரணமாகும். அதே திட்டக்குழு எதிர்காலத்தில் நடுவண் அரசை ஓர் "**இந்தி வல்லரசாக**" மாற்றியமைக்கக் கூடிய வல்லாண்மைக் கருவியாகவும் இனி செயல்பட உள்ளது. அதற்குரிய பச்சைக் கொடியும் காட்டப்பட்டு விட்டது. இனியாவது திராவிட இயக்கங்கள் தம் நீண்ட துயிலின்றும் விழித்தெழுந்து மீளா இந்தித் திணிப்பிலிருந்து தமிழகத்தைக் காக்குமா? அல்லது தமிழக மக்களின் நீறு பூத்த நெருப்புப் போன்ற இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை மூலப்பொருளாகப் பயன்படுத்திக் கொண்டு, தம் சொந்தக் கட்சி நலன்களை மட்டுமே கருதிச் செயல்படுமா? தமிழ் நாட்டின் எழுச்சியா? வீழ்ச்சியா? வரலாறு கூறும்.

"முன்னுறக் காவாது இழுக்கியான் தன் பிழை
பின்னூறு இரங்கி விடும்"
—குறள் 535

தென்மொழி

சென்னை-5

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம் :	15 உருபா	35 உருபா	35 உருபா
அரையாண்டுக் கட்டணம் :	8 ,,	18 ,,	18 ,,
தனியிதழ் :	1-25 ,,	3 ,,	3 ,,

ஓரிதழுக்கு உருபா 2.50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க

www.thamizham.net - Free E book No 7521

சாய்கடை நடைபாதைகளிலும் (பன்றிக்) குடிசைகளிலுந்தாம் அதிகம். அவர்களுக்கு இன எழுச்சி வருமா?

சிற்றூர்ப்புற முரடர்களும் நகரத்துத் திருடர்களும் தமிழின எழுச்சி கொள்வார்களா? நம்மிடமுள்ள மெய்யறிவும், தூய்தமிழும் போதுமா? இன்னும் என்ன வேண்டும் என்பதை எண்ணிச் செயல்படுவோம்.

—வெங். கண்ணன், வடபழனி, சென்னை.

0: 922 பேரன்பு கெழுமிய தனித்தமிழ்த் நல்லீர்! வணக்கம். வாழ்க. ஈடிலாத் தண்டமிழ்ப் பூங்காவாம் தென்மொழி இலக்கிய இதழினையும், சின்னஞ்சிறு பிஞ்சுளத்தில் தனித்தமிழ் உணர்வூற்றுகள் பெருக்கெடுக்கவும் மறவுணர்வு பெறவும் நல்ல பல அரிய பாடல்களும் கருத்துகளும் கொண்டுவரும் 'தமிழ்ச்சிட்டு' இதழினையும் தொடக்க முதல் சுவைத்து வரும் அன்பர்களுள் நானும் ஒருவன். நும் அரிய பணி வாகையெய்த எல்லாம் வல்லான் அருள் வேண்டுகின்றேன். அன்பன், —வீ. விஸ்வநாதன், வெங்காலூர்-16

0: 923: அன்புமிக்க ஐயா அவர்களுக்கு, வணக்கம். தங்கள் இதழ்களில் தங்களின் கரும்புச் சாறனைய சுவைமிக்கத் தனித் தமிழைச் சுவைத்து மகிழ்பவன். இந்த நிலையில் தமிழ் இனத்தினைக் காக்கும், தங்கள் அமைப்பின் தொடக்க மாநாட்டு வெற்றி எங்களுக்குப் பெருத்த மகிழ்ச்சியை அளிக்கிறது. மாநாட்டில் பங்கு கொண்ட தமிழ்ப் பெரியவர்களுக்கு, வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.—சுப்பிரமணியன் இளங்கோவன்.(க.மு.)சென்னை-18

0: 924: ஐயா, தாங்கள் தமிழுக்குத் தொண்டாற்றித் தமிழர்கள் பல நாடுகளில் வாழ்ந்து பலவேறு கோணங்களாகப் பிரிந்து பலவாறு துன்புறுவதைக் காணப் பொறுக்காமல் "தென்மொழி" யின் மூலம் எடுத்துரைத்து, எங்களை ஒன்றுக இணைத்து வாழும், அமைப்பைக்கண்ட திரு. பெருஞ்சித்திரனுர் அவர்களே! தங்களின் ஒவ்வொரு சிறந்த தொண்டுக்கும் தங்களைப் பாராட்ட தமிழின மக்கள் கடமைப்பட்டவர்களாவர். தங்களின் பெரு முயற்சியில் உருவான உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் சிறந்து விளங்கி அனைவரின் உள்ளத்தில் ஒற்றுமையெனும் ஒளி வீசட்டும்.

—இரமணிச்சந்திரன். போர்ட்பிளேயர்.

0: 925: உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் கண்ட உயர் நெஞ்சினராகிய உயர்திரு. பாவலரேறு அவர்களுக்கு, ஐயா! மதம், குலம், சாதி, அரசியல், பண்பாடு முதலியவற்றில் தாக்குண்டு அழிவுப் பாதையை நோக்கிச் செல்லும் தமிழினத்தை, ஒருநிலைப் படுத்தி உயர்ந்த வாழ்வியலை உருவாக்கித் தருவதற்காக ஓயாது அல்லும் பகலும் உலகத் தமிழின முன்னேற்றக் கழக வளர்ச்சிக்காகத் தாங்கள் பாடாற்றுவதைப் புலவர் தமிழ்வேந்தன் எழில் வாயிலாக அறியலானேன். மாந்தப் பிறவி எடுத்த நான் என் தாய் மொழியாம் தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் ஒல்லும் வகையான் அயராது தொண்டாற்ற எண்ணியுளளேன். நான் வேளாண் தொழிலை மேற்கொண்டுள்ளேன். எனக்கு நல்ல ஆங்கில மொழிப் புலமை அதிகம் உண்டு. நான் பொதுமக்களின் தொண்டனுகப் பல்வேறு வழிகளில் பயன்பட்டுப் பணியாற்றியுள்ளேன் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தில் பணியாற்ற என் முழு விருப்பத்திற்கு இணங்க பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன். இப்படிக்கு —இரா. சிவசங்கரலிங்கம், காவனூர்-திருமுட்டம் (வட்.)

www.thamizham.net - Free E book No 7521

0: 926: உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் கண்ட ஒப்பற்ற பாவலரேறு அவர்கட்கு, ஏறத்தாழ இருபத்தைந்தாண்டுகளாகத் தமிழ்த்தொண்டாற்றி வரும் புலவர் துரை.காசிநாதன் வரையும்மடல். வணக்கம். ஐயா இந்த ஞாலமடியில் ஆலமர விழுதுகளாகவும், வேர்களாகவும் ஓடி உழைத்து ஓடாய்த் தேய்ந்து உருக்குலைந்து போகும் உயர்குடி மக்களாகிய தமிழினத்திற்கு ஒட்டு மொத்தமாக ஒரு கட்டுக் கோப்பான இயக்கத்தை உருவாக்கி, அதற்கு 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்' எனப் பெயரமைத்து, எழு வகைக் கொள்கையினை நளி விளக்காக ஏற்றிவைத்து,இரவும் பகலும் இடையறுமல் தாங்கள் உழைத்து வருவதை, என் மாணவராக இருந்த புலவர். தமிழ்வேந்தன் வழியாக அவ்வப்போது அறியலுற் றேன்.மத, குல, சாதி முதலியவற்றாலும் அரசியல் ஆளுமைக் காழ்ப்பு உணர்ச்சிகள் - கரவாண்மைகள் முதலியவற்றாலும் நம் மானமிகு வளர்தமிழினம் வளமிழந்து நலமிழந்து வலிவழந்து பொலிவிழந்து நாளுக்குநாள் தேய்ந்து வருவதால் எவ்வாறேனும் நாம் அனைவரும் ஒன்றுகூடி, நம் மக்களை முன்னேற்றியாக வேண்டும் என்ற எண்ணம் நெடுநாட்களாக என் நெஞ்சில் நெருடிய வண்ண மிருந்தது. அந்த எண்ணத்தை ஏற்றிச் சென்று பயன்படுத்திக் கொள்ளும் தோணியாக-கப்பலாகத் தாங்கள் உருவாக்கியுள்ள கழகம் இருக்கின்றது.எனவே யானும் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தில் சேர்ந்து தொண்டாற்றக் கடமைப் பட்டுள்ளேன்.

— துரை.காசிநாதன்,பெண்ணாகடம், வ. ஆ,

0: 927: மதிப்பிற்குரிய பாவலரேறு அவர்களுக்கு ஐயா, கடந்த இரண்டு மூன்று தென்மொழி இதழ்களைப் படித்த பின்னர் எமது உள்ளத்தில் நிறைந்திருந்த ஏக்கம் சிறிது தணிந்துள்ளது. கரணியம் யாதெனில் இத் தமிழகத்திற்குக் கட்சிகளால் எவ்வகை முன்னேற்றமும் ஏற்படப் போவதில்லை. அவை நாடு, மொழி இன நலன்களைச் சிறிதும், நினையாது, ஒவ்வொன்றும் மற் றொன்றை எவ்வாறு வீழ்த்துவது என்ற நோக்கில்,நாட்டில் கலகங் களைத் தோற்றுவிப்பதும்,பொதுச் சொத்துகளை அழிப்பதுமே தங்கள் அரிய செயற்பாடுகளாக நாளும் செய்து வருகின்றன.

இந்த நிலையில் நாடு பற்றியும் மொழி, இனம் பற்றியும், எண்ணிப் பார்க்கவாவது ஓரமைப்பு ஏற்படாதா என்று ஏங்கிக் கொண்டிருந்த நேரத்தில், தென்மொழியில் இவற்றுக்காக ஓரமைப்பு அமைப்பதன் தேவை பற்றிய செய்தி வந்தது; இப்பொழுது மொழி இன நலன் காக்க வென்றே இயக்கம் தொடங்கியதும், அதன் நோக் கங்களும், தென்மொழி வாயிலாக அறியும்போது இருண்டவானில் எங்கோ ஒரு மூலையில் ஓர் ஒளிக்கீற்றுத் தோன்றுவது போல் தெரி கிறது. இவ்வொளிக் கீற்றானது பகலவனது பேரொளியாக மாறும் எனும் நம்பிக்கையொளி உள்ளத்தில் ஊடுருவிப் படர்கிறது.

- இப்பொழுது மக்கள் அரசியல் கட்சிகளின் வலிந்த பிடியில் சிக்கியுள்ளனர்.இந்நிலை மாறிக் கட்சிகள் மக்கள் கையின் அறநெறிப் பிடியில் இருக்குமபடி செய்ய வேண்டும். அது தனியொருவரால் இய

(தொடர்ச்சி 23-ஆம் பக்கம் பார்க்க)

www.thamizham.net - Free E book No 752